விலை : 20.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 28 சனிக்கிழமை (10.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 053


கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில்

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் இன்று



### நாடளாவிய ரீதியில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்) ஆட்சி மாற்றத்தின் பின்னர் முதன்முறையாக பலத்த எதிர்பார்ப்பின் மத்தியில் நாடு முழுவதும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தலின் வாக்களிப்பு இன்று காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நாடளாவிய ரீதியில் ஒரே நேரத்தில் இடம்பெறவுள்ளது. (23-ம் பக்கம் பார்க்க...)

## முறைப்பாடுகளை அறிவியுங்கள்

### தேர்தல் ஆணைக்குழு மக்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இன்று ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் முடியும் வரையிலான 24

## முல்லைத்தீவில் வேட்பாளர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயா பிரதேசத்தில் வாக்காளர் அட்டைகளை வேட்பாளர் ஒருவர் தனது கடையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு 24

## வாக்குச் சாவடிக்கு செல்பவர்களுக்கு

### தேர்தல்கள் ஆணைக்குழு விளக்கம்

(கொழும்பு)

இன்று இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஒரு கட்சி அல்லது சுயேட்சைகுழு சார்பில் இருவர் தேர்தல் முகவர்களாக செயற்படுவதற்கு அனுமதி 23

### உள்ளூராட்சி தேர்தலுக்கான

## முதலாவது பெறுபேறுகள் இரவு 7 மணிக்கு வெளியாகும்

(கொழும்பு)

340 உள்ளூராட்சி மன்றங்களுக்காக இன்று நடைபெறவுள்ள தேர்தல் பெறுபேறு, இரவு 7 மணியளவில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

விகிதாசார மற்றும் தொகுதி கலப்புமுறையில் நடைபெறும் இந்த தேர்தலில் தெரிவாகவுள்ள உறுப்பினர்கள் ஒரு உள்ளூராட்சி மன்றத்துக்கு அளிக்கப்படும்வாக்குகளிலேயே தங்கியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத்திற்குட்பட்ட ஒரு வட்டாரத்திற்கான வாக்குகள் வட்டார வாக்களிப்பு நிலையத்திலேயே எண்ணப்படும். 24

### மன்னார் இளைஞன்

## சுவிட்சர்லாந்தில் அடித்துக் கொலை



(பனிக்கன்குளம்)

மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட நறுவிலிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 7 ஆம் திகதி புதன்கிழமை மாலை 24

### வாக்காளர்களான பொதுமக்களுக்கு

## தேர்தல்கள் ஆணைக்குழு முக்கிய அறிவித்தல்

(கொழும்பு)

இன்று இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்களிப்பின் போது, புள்ளடியினை மாத்திரம் இடவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு வாக்காளர்களை கோரியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனை தெரிவித்துள்ளார். வேறு எந்த அடையாளங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார். ஏதேனும் ஒரு வாக்குச் சாவடியில் வன்முறையான சம்பவம் இடம்பெற்றால் அந்த நிலையத்தின் தேர்தலை 23

## பெண் வேட்பாளரை காணவில்லை

### பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேலதிக பட்டியலில் வேட்பாளராக போட்டியிடும் பெண்ணொருவர் காணாமல் போயுள்ளதாக 23

## நல்லாட்சி அரசுக்கு ஐ.நா ஆதரவு

### வெளிவிவகார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையின் கூட்டு அரசாங்கத்தின் நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் முயற்சிக 23

## எல்பிட்டிய சபைக்கு தேர்தல் இடம்பெறாது

(கொழும்பு)

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ளது.

இருப்பினும் வேட்புமனு தொடர்பில் நிலவும் பிரச்சினை 24

## பொலிஸாரின் கடும் பாதுகாப்புடன் வாக்குப்பெட்டிகள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகள் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், வாக்குப்பெட்டிகள், நேற்று காலை வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள யாழ்.மாவட்டத்தின் தேர்தல் மத்திய நிலையத்திலிருந்து வாக்குப்பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாநகர சபை, 3 நகர சபைகள் மற்றும் 13 பிரதேச சபைகள் என 17 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. 243 வட்டாரங்களில் 521 வாக் 23



### விமானப்படையின் உதவியுடன்

## தீவுப்பகுதிக்கான வாக்குப்பெட்டிகள் விநியோகம்

(கொழும்பு)

தீவுப்பகுதியிலுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் விமானப்படையின் போக்குவரத்து உதவியுடன் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 24

## தேர்தலுக்கு தேவையேற்படின் விசேட அதிரடிப்படை பயன்பாடு

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தேவையேற்படின் விசேட அதிரடிப்படையினரைப் பாவிப்போம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எம்.எம்.முஹம்மட் தெரிவித்துள்ளார்.

நாடு எங்கிலுமுள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்புக்கள் வழங்கப்படுகின்றன. தேவையான இடங்களில் மாத்திரம் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புப்பெற்றுக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் 23

### சுமார் 40 வருடங்களுக்கு பின்னர்

## புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளுக்கும் தேர்தல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளில் சுமார் நாற்பது வருடங்களின் பின்னர் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்த இரு பிரதேச சபைகளுக்குமான தேர்தல் 1970ஆம் ஆண்டில் இறுதியாக நடத்தப்பட்டதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர், எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு 207 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் இவர்களில் 20 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

25 வீத பெண் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தெரி 24

## தேர்தலில் வாக்களிப்பதற்காக விடுமுறைக்கு விண்ணப்பிப்போருக்கு கொடுப்பனவுடன் கூடிய விடுமுறை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக விடுமுறை கோரி விண்ணப்பிக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொடுப்பனவுடன் கூடிய விடுமுறையை உரிய தொழில் வழங்குநர்கள் வழங்க வேண்டியது கட்டாயம் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடுமுறை வாக்குச்சாவடிக்கும், வாக்காளருக்கும் இடைப்பட்ட தூரத்தை பொருத்து வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விடுமுறை வழங்கப்படும் போது ஊழியருக்கான கொடுப்பனவு உட்பட ஏனைய சலுகைகளுடன் அவை வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொடுப்பனவு இல்லாமல் விடுமுறை வழங்கப்படுவதாகக் கிடைக்கப் பெற்ற சில முறைப்பாடுகளை பரிசீலித்த பின்னரே தேர்தல் ஆணைக்குழு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

அரச மற்றும் தனியார் தொழில் வழங்குநர்கள் இந்த விடயம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தும்படி தேர்தல் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம)


**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

**அமரர் கோபால் சிவனம்மா (தங்கம்)**



பிறப்பு 1944 - 10 - 09

இறப்பு 2017 - 01 - 21

எங்கள் அன்புத் தாயே
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
ஆறிடுமா எங்கள் துயரமம்மா?
நிழல் தந்து எமை வளர்த்து
நிலைத்து மண்ணில் வாழ வைத்து
உறுதியுடன் எம்மைக் காத்த
உத்தமியே எங்கள் அன்புத் தெய்வமே!
உன் பிரிவால் துடிக்கின்றோம் அம்மா!

இன்று (10.02.2018) சனிக்கிழமை நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**இல.108, அம்பாள்குளம், கிளிநொச்சி**

**-குடும்பத்தினர்**

(சி-1545)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## மயிலிட்டி முழுமையாக விடுவிக்கப்படாததால் மீன்பிடி படகுகளை தரிக்க முடியாதுள்ளது

### மீள்குடியேற்ற குழு குற்றச்சாட்டு

மயிலிட்டி துறைமுகம் முழுமையாக விடுவிக்கப்படாமையால் அதிகளவான மீன்பிடி படகுகளை தரித்து நிறுத்தி மீன்பிடியில் ஈடுபட முடியாத நிலை காணப்படுவதாக மயிலிட்டி மீள்குடியேற்ற குழு தெரிவித்துள்ளது. துறைமுகத்தை முழுமையாக விடுவிக்காமல், மயிலிட்டி துறைமுகம் முழுவதையும் விடுவித்துவிட்டதாக அரசு பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றது எனவும் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த ஆண்டு யூலை மாதம் 3ஆம் திகதியன்று மயிலிட்டி துறை வடக்கு கிராம சேவகர் பிரிவில் 54 ஏக்கர் நிலம் 27 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு விடுவிக்கப்பட்ட இடங்களில் பெருமளவு மக்கள் வசிக்காத கடற்கரை பகுதிகளே உள்ளன. மக்களுடைய குடியிருப்பு நிலங்கள் தற்போதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

இந்த நிலையில் விடுவிக்கப்பட்டதாக கூறப்பட்ட மயிலிட்டி துறைமுகத்தின் ஒரு பகுதி தற்போதும் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் குறித்த துறைமுகம் ஊடாக குறைந்த அளவிலான படகுகளே தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதாக மயிலிட்டி மீள்குடியேற்ற குழு தெரிவித்துள்ளது. விடுவிக்கப்படாத துறைமுக பகுதிக்கு அருகில் கடற்படை காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு கண்காணிப்பில் கடற்படை ஈடுபட்டு வருகின்றனர்.

மீன்பிடி தொழிலில் ஈடுபடும் படகுகளும் துறைமுகத்தின் சிறிய இடத்தையே பயன்படுத்துவதால் சுதந்திரமாக தொழிலில் ஈடுபட முடியவில்லை எனவும் மயிலிட்டி மீள்குடியேற்ற குழு தெரிவித்துள்ளது. மேலும் மக்களுடைய நிலங்களை விடுவித்தால் தான் இங்கு நிரந்தரமாக குடியேறி கடற்றொழிலில் ஈடுபட முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் நீண்ட காலத்தின் பின்னர் வீதியை விடுவித்து விட்டு அதனை மக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்த அனுமதிக்காமல் தனியே பஸ்ஸில் சென்று வர அனுமதிப்பது என்பதும் ஏமாற்று வேலை எனவும் குறித்த குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-4)

## சட்ட விரோத மணல் அகழ்வு ஹன்டர் வாகனத்துடன் சந்தேக நபர் ஒருவர் கைது

குடத்தனைப் பகுதியில் சட்டவிரோத மணல அகழ்வினை மேற்கொண்ட ஹன்டர் வாகனத்தினையும் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்த விசேட அதிரடிப் படையினர் அவற்றை பருத்தித்துறைப் பொலிஸில் பாரப்படுத்தியுள்ளனர்.

அப்பகுதியில் மணல் கடத்தப்படுவது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை அங்கு சென்ற அதிரடிப்படையினர் மணல் அகழ்விற்கு பயன்படுத்திய ஹன்டரை கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-60)

## சட்டத்தை மீறி கையேடுகளை விநியோகித்த வேட்பாளர் கைது

கையேடுகளை விநியோகித்துக் கொண்டிருந்த வேட்பாளர் ஒருவர் சிலாபம், புஞ்சூலத்தாவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று பகல் சிலாபம் பொலிஸாரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

சந்தேகநபரான வேட்பாளரிடம் இருந்து கட்சி சின்னத்துக்கு புள்ளடியிடப்பட்ட 22 கையேடுகள் மற்றும் 02 பதாகைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர் சிலாபம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட உள்ளார். (ம)


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



**14.01.2018 ஞாயிற்றுக்கிழமை**

**சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்**

**அமரர் வீரகத்தி குமாரசாமி**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 10.02.2018 சனிக்கிழமை காலை 5.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து 12.02.2018 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி வடக்கு, வரணி

இங்ஙனம் குடும்பத்தினர்

(2711)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**

அமரர் திருவாட்டி

**தில்லைநாயகி குகநாகதாசன்**

அன்னை மடியில் 07 - 01 - 1924

விண்ணின் பிடியில் 11 - 01 - 2018



எமது குடும்பத் தலைவி 11.01.2018 அன்று எமை விட்டுப் பிரிந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவியோர், தொலைபேசி, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தோர், நேரில் வருகை தந்து அன்னாரின் ஈமக்கிரியைகளில் பங்கு கொண்டோர், உதவியோர், பனர்கள், மலர்வளையம், அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோர், 08.02.2018 அன்று கீரிமலையில் நடைபெற்ற இறுதி வேள்வி நிகழ்வில் பங்கு கொண்டோர் மற்றும் பல்வேறு வகையில் எமக்கு உதவி நின்றோர் யாவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, 10.02.2018 சனிக்கிழமை இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் உயிரமைதி வழிபாட்டில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

**59, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.**

**-குடும்பத்தினர்**

(2711)

# 'பிரபாகரன் எங்கள் தலைவர்'



## அனைத்தும் முடிந்து விட்டது என்பதை உணர்த்தவே கழுத்தில் கைவைத்தேன்-பிரியங்க தன்னிலை விளக்கம்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலி பயங்கரவாதிகள் பிரபாகரன் எங்கள் தலைவர் எனக் கூச்சலிட்டு போராட்டம் நடத்திய போது நான் கழுத்தில் கையை வைத்து அனைத்தும் முடிந்துவிட்டது என்றே கூறியிருந்தேன் என்று பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ விளக்கமளித்துள்ளார்.**



இச் சம்பவம் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு விளக்கம் கொடுத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து வெளியிட்டுள்ள அவர்,

எல்லாம் முடிந்துவிட்டது என்றே சைகை மூலம் காண்பித்தேன். பிரிட்டனுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் அழைப்பினை ஏற்று சுதந்திர தின நிகழ்வில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் 250இற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

நான் ஏற்கனவே புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளமை பற்றி அறிந்திருந்தேன்.

இதன்படி, தூதரகப் பொலிஸார் பாதுகாப்பு வழங்கியிருந்தனர். சுதந்திர தின நிகழ்வுகள் நிறைவடைந்ததன் பின்னர், போராட்டக்காரர்கள் இருந்த காரணத்தினால் உயர்ஸ்தானிகராலயத்தில் உள்ள தமிழர்களின் பாதுகாப்பு குறித்து கூடுதல் கவனம் செலுத்தியிருந்தோம்.

தமது பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்துமாறு அவர்கள் கோரியிருந்தனர். வெளியே செல்ல அச்சமடைந்த காரணத்தினால் அவர்களை பின் கதவு வழியாக வெளியே அனுப்பினேன்.

"இவனுகளுக்கு ஏன் பயப்பட வேண்டுமெனக் கூறி" சிங்கள இளைஞர்கள் முன் கதவு வழியாக வெளியே சென்றனர்.

இந்த இடத்தில் இனவாதம் கிடையாது. இலங்கையின் சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது எனவும், ஜனாதிபதி தமிழில் அனுப்பி வைத்த சுதந்திர தின செய்தியையும் போராட்டக்காரர்களிடம் வழங்கியிருந்தேன்.

போராட்டக்காரர்களில் இருந்த அவர்களின் தலைவர் ஒருவர், இந்தச் செய்திகளை எடுத்து எரித்தார். தீயிட்டு எரித்த நபரை பிரித்தானிய தூதரக பொலிஸார் கைது செய்தனர்.

அதன்போது குழப்பமடைந்த போராட்டக்காரர்கள் உயர்ஸ்தானிகராலயத்திற்கு அருகாமையில் ஓடி வந்தனர்.

சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்ற அனைவரினதும் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கிருந்தது. சீருடை அணிந்த நிலையில், நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட இடமளிக்க முடியாது.

"பிரபாகரன் அவர் ஹீரோ" என கோசமிட்ட புலி ஆதரவாளர்களிடம் "எல்லாம் முடிந்து விட்டது" என நான் கூறினேன். "தமிழ் ஈழம் அவர் லேண்ட்" என கோசமிட்ட போது "திஸ் இஸ் யுவர் லேண்ட்" என இலங்கை தேசியக் கொடியை காண்பித்தேன்.

நான் ஒரு தடவை விரலில் காண்பித்த சைகையை புலிகளுக்கு ஆதரவான ஊடகம் பல தடவை காண்பிப்பது போன்று எடிட் செய்து ஊடகங்களில் பிரசாரம் செய்துள்ளது.

வடக்கில், வன்னியில் மட்டுமன்றி பிரிட்டனிலும் நான் தமிழ் மக்களுக்கு எவ்வளவு சேவையாற்றியிருக்கின்றேன் என்பது தெரியும். நீங்கள் இலங்கைக்குச் செல்லாது ஒவ்வொருவர் சொல்லுவதனை வைத்துக் கொண்டு குற்றம் சுமத்த வேண்டாம் என நான் சீருடையை மாற்றிக் கொண்டு போராட்டக்காரர்களிடம் சென்று கூறினேன்.

நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து இலங்கை சென்று பார்க்குமாறு கூறினேன். அந்தத் தருணத்தில் இலங்கையர் என்ற ரீதியில் நான் செயற்பட்ட விதம் குறித்து பெருமிதம் கொள்கின்றேன் என்றும் தெரிவித்தார்.

என்னை விடவும் நாடு முக்கியம் என்பதனை நான் கற்ற டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியிலிருந்து கற்றுக் கொண்டேன். அதன் அடிப்படையிலேயே நான் செயற்படுகின்றேன் என பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 7ஆம் திகதி பகல், தொலைபேசி மூலம் அழைப்பினை ஏற்படுத்தி பணி இடைநிறுத்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. பதற்றமடைய வேண்டியதில்லை என தமக்கு கூறியதாக பிரிகேடியர் பிரியங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வாக்குப் பெட்டிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு இன்று விசேட பொலிஸ் நடமாடும் சேவை



(கொழும்பு)

இன்று நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்களிப்பிற்கான வாக்குச் சீட்டுக்கள் மற்றும் வாக்குப்பெட்டிகளை விநியோகிக்கும் பணிகள் நேற்றுக் காலை 8 மணி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 8325 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெறும்.

வாக்களிப்பு நிறைவடைந்ததும் தபால் வாக்குகள் மற்றும் வாக்களிப்பு முடிவுகளை எண்ணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஒரு வாக்களிப்பு நிலையத்தைக் கொண்ட தேர்தல் பிரிவுகளின் தேர்தல் முடிவுகள் அந்த இடத்திலேயே எண்ணப்படும் என்று ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

13.374 வாக்க்ளிப்பு நிலையங்கள் இதற்கென தயார் செய்யப்பட்டுள்ளன. வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளோரின் எண்ணிக்கை ஒரு கோடியே 57 இலட்சத்து 60 ஆயிரத்து 50 பேர் ஆகும்.

இதேவேளை அனைத்து வாக்களிப்பு நிலையங்களையும் உள்ளடக்கிய வகையில் பொலிஸ் நடமாடும் சேவையை முன்னெடுப்பதற்கும் திட்டமிட்டு இருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சுமார் 6 ஆயிரம் பேர் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## உள்ளூராட்சி தேர்தல் இன்று இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு வாக்களிக்க போக்குவரத்து வசதிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் வாக்காளர்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்களுக்கு 2018.02.10 இன்று தேர்தலில் வாக்களிக்கச் செல்வதற்கான போக்குவரத்து வசதி கள் பின்வரும் பாதையூடாக நடைபெற ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இந்தப் போக்குவரத்து வசதிகளை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

பேருந்து செல்லும் பாதை- கற்கோவளம் மெதடிஸ்த மிசன் பாடசாலை - முனை- பருத்தித்துறை- வியாபாரி மூலை- பொலிகண்டி- வல் வெட்டித்துறை- தொண்டைமானாறு (கடற்கரை வீதி) ஊடாக வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்றடையும் என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

சிறுநீரக நோய்களுக்குச் சிகிச்சை
Ayurvedic Treatment for Renal Diseases

சிறுநீர் குறைவாகவும், வலி மற்றும் எரிச்சல் கடுப்புடன் வெளியேறல். ஆரம்ப நிலை சிறுநீரக செயலிழப்பு நிலை (Renal Failure in Primary Stage). சிறுநீரகம், சிறுநீர்பை இவற்றில் கற்கள் காணப்படுதல் (Stone in the Kidney & Bladder) கற்கள் காரணமாக ஏற்படும் வயிற்று வலி, சிறுநீர்த் தடை, இரத்தம் கலந்த சிறுநீர் வெளியேறல் மற்றும் ஆண்களில் ஏற்றபடும் புரஸ்தகோள (Enlargement of the Prostate gland) பிரச்சினைகள் போன்றவற்றால் சிறுநீர் கழிப்பதில் தாமதம், தடை, அடிக்கடி வெளியேற்றும் உணர்வு மற்றும் சிறுநீர்த்தொற்று (Urine Infection), கீழ்வயிற்று வலி, நித்திரை மற்றும் மனக்குழப்பம் போன்ற பிரச்சினைகளுக்கு சித்த ஆயுள்வேத முறையில் சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்.
Tel. 021 205 4066 / 077 872 5251

# லக்மல், தனஞ்செய, ரோஷன் அசத்தல்

# டாக்கா டெஸ்ட் இலங்கையின் கட்டுப்பாட்டுக்குள்



சுரங்க லக்மலின் வேகமும் அறிமுக அகில தனஞ்செயவின் சுழலும் கைகோர்க்க, இறுதி 5 விக்கெட்டுக்களை வெறும் 3 ஓட்டங்களுக்கு இழந்த பங்காளதேஷ் டாக்கர் டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் 110 ஓட்டங்களுடன் சுருண்டது.

தொடர்ந்து தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி, ரோஷன் சில்வாவின் அபாரமான அரைச்சதத்தின் உதவியுடன் 312 ஓட்டங்களால் பலமான முன்னில்லை பெற்றுள்ளது.

பங்களாதேசுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரில்சிட்டஹொாங கில் நடைபெற்ற முதல் டெஸ்ட் சமனிலையான நிலையில்,

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் நேற்று முன்தினம் டாக்காவில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் குசல் மெண்டிஸ 68, ரோஷன்சில்வா 56 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் அப்துர் ரசாக், தையுல் இஸ்லாம் ஆகியோர் 4, முஸ்தபிசுர் ரஹ்மான் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி

நேற்றைய முதல் நாள் ஆட்டநேர நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களை எடுத்து தடுமாறியது.

களத்தில் லிட்டன் தாஸ் 24, நைட் வோட்ச்மேன் மெஹிடி ஹசன் மிராஸ் 5 ஓட்டங்களுடன் இருந்தனர்.

நேற்று 2ஆம் நாள் ஆட்டம் நடந்தது. லிட்டன் தாஸ் மேலும் ஒரு ஓட்டம் எடுத்து 25 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து மெஹிடி ஹசன் மிராசுடன் அணித் தலைவர் மகமுதுல்லா ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி ஓரளவிற்கு தாக்குப்பிடித்து விளையாடியது. ஹசனின் நேர்த்தியான துடுப்பாட்டத்தினால் பங்களாதேஷ் 100 ஓட்டங்களைத் தாண்டியது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 107ஐ எட்டிய போது மக முதுல்லா 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின் வந்த சபீர் ரஹ்மான் (0), அப்துர் ரசாக் (1), தையுல் இஸ்லாம் (1), முஸ்தாபிசுர் ரஹ்மான் (0) அடுத்தடுத்து ஆட்டமிழக்க பங்களாதேஷ் முதல் இன்னிங்ஸில் 110 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

பங்ளாதேஷின் இறுதி 5 விக்கெட்டுக்களும் 3 ஓட்டங்களுக்கு இழக்கப்பட்டமை அவ்வணிக்கு பெரும் பின்னடைவைக் கொடுத்தது.

இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த மெஹிடி ஹசன் மிராஸ் 38 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் லக்மல், அகில தனஞ்செய ஆகியோர் 3, டில்ருவன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

112 ஓட்டங்கள் முன்னிலையில் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு குசல் மெண்டில் (7) அதிர்ச்சியளித்தார். கருணாரத்ன (31), தனஞ்செய டி சில்வா (28), அணித் தலைவர் சண்டிமல் (30) ஓரளவு கைகொடுத்தனர். ரோஷன் சில்வா (56*) நம்பிக்கை அளித்தார்.

இந்நிலையில் நேற்றைய 2ஆம் நாள் நிறைவுக்கு வந்துபோது இலங்கை அணி 2ஆவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களை எடுத்து 312 ஓட்டங்களால் வலிமையான முன்னிலை பெற்றுள்ளது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் முஷ்தபிசுர் ரஹ்மான் 3, மெஹிடி ஹசன் மிராஷ், தையுல் இஸலாம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் 3ஆம் நாளாட்டம் இன்றாகும்.

## ஐஸ் கிரிக்கெட்

## தொடரை வென்றது றோயல்ஸ்



சுவிட்சர்லாந்தில் நடந்த ஐஸ் கிரிக்கெட் தொடரின் 2ஆவது போட்டியிலும் சேவாக் தலைமையிலான பேலஸ் டயமண்ட்ஸ் அணி தோல்வியடைந்தது.

சுவிட்சர்லாந்தின் அல்ப்ஸ் மலைப்பகுதியில் உள்ள செயின்ட் மொரிட்ஸ் ஏரி, 6 மாதங்களுக்கு உறைந்த நிலையில் இருக்கும் என்பதால், முதன்முறையாக 2 போட்டிகள் கொண்ட ஐஸ்கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டது.

இதில சேவாக் தலைமையிலான பேலஸ் டயமண்ட்ஸ், அப்ரிடியை தலைவராகக் கொண்ட றோயல்ஸ் அணிகள் விளையாடின.

முதல போட்டியில் சேவாக் அணி, தோல்வியடைந்தது.

**சைமண்ட்ஸ் ஆறுதல்**

நேற்று நடந்த இரண்டாவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த பேலஸ் டயமண்ட்ஸ் அணிக்கு டில்ஷான் (5), மஹேல ஜேயவர்த்தன (0) ஏமாற்றினர். பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் சேவாக் (46) ஆறுதல் அளித்தார். மைக்கல் ஹசி (18) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய அன்ட்ரூ சைமண்ட்ஸ் (67*), மொஹமட் கைப் (57*) கைகொடுக்க, பேலஸ் டயமண்ட்ஸ் அணி, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களை எடுத்தது.

**கலிஸ் கலக்கல்**

சவாலான இலக்கை விரட்டிய றோயல்ஸ் அணிக்கு மட் பிரையர் (6) ஏமாற்றினார். கிரேம் ஸ்மித் (58) நம்பிக்கை அளித்தார். பின் இணைந்த கலிஸ், ஒவைஸ்ஷா ஜோடி, அபாரமாக ஆடியது.

சிக்ஸர், பவுண்டரிகளாக விளாசிய கலிஸ், அரைச்சதம் கடந்தார். புல்ஷான் பந்தில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்த ஒவைஸ் ஷா, வெற்றியை உறுதி செய்தார்.

றோயல்ஸ் அணி, 16.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து, 206 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் 2ஆவது வெற்றியை பதிவு செய்தது.

களத்தில் கலிஸ் (90), ஒவைஸ் ஷா (43) இருந்தனர்.

இதன்மூலம் தொடரை 2-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

## வில்லியர்ஸ் வருகை தெ.ஆ ஏறுமுகமாகுமா?

ஜொகனஸ்பேர்க்கிலும் 'ரன் எந்திரமாக' ஜொலிக்க அணித் தலைவர் ஹோலி தயாராக உள்ளார். மணிக்கட்டு 'சுழல்' ஜாலம் காட்ட சகால், குல்தீப் யாதவ் கூட்டணி காத்திருக்கிறது. இந்தியா வெல்லும் பட்சத்தில், தென்னாபிரிக்க மண்ணில் முதல் முறையாக ஒருநாள் தொடரை கைப்பற்றி வரலாறு படைக்கலாம்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி, ஆறு போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகளில் மிரட்டிய இந்திய அணி, 3-0 என தொடரில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகள் மோதும் நான்காவது போட்டி, இன்று ஜொகனஸ்பேர்க்கில் உள்ள வொண்டரர்ஸ் மைதானத்தில் நடக்கிறது.

இதற்கு முன் தென்னாபிரிக்காவில் விளையாடிய நான்கு ஒருநாள் தொடரில் ஒன்றில் கூட இந்தியா, வெனறது கிடையாது. 1992-93ல் 2-5, 2006-07ல் 0-4, 2010-11ல் 2-3, 2013-14ல் 0-2 என, தொடர்களை இழந்தது. கடந்த 2010-11ல் தோனி தலைமையிலான அணி, 2-1 என முன்னிலையில் இருந்தது. பிறகு தொடரை 2-3 என, இழந்தது. தற்போது முதன் முறையாக சாதிக்கும் வாய்ப்பு வந்துள்ளது.

**ரோகித் தடுமாற்றம்**

இந்திய அணிக்கு அடுத்தடுத்து அரைசதம் அடித்து ஷிகர் தவான் (51, 76), ஆரம்பத்தில் நம்பிக்கை அளிக்கிறார். மாறாக, தென்னாபிரிக்க மண்ணில் விளையாடிய 11 ஒருநாள் போட்டிகளில், சராசரி 12.10 ரன் வைத்துள்ள ரோகித் சர்மா நிலைதான் பரிதாபமாக உள்ளது.

ஒருநாள் அரங்கில் மூன்று இரட்டை சதம் அடித்த இவர், இன்று மீள்வார் என நம்புவோம். 'நடுத்தர வரிசையில்' ஹோலியின் (112, 46, 160) ரன் வேட்டை இன்றும் தொடர வேண்டும். அடுத்து வரும் ரகானே, பாண்ட்யா, தோனி, கேதர் ஜாதவ் உள்ளிட்டோர் வாய்ப்புகளை பயன்படுத்தினால் நல்லது.

**பந்துவீச்சு நம்பிக்கை**

பந்துவீச்சில் புவனேஷ்வர், பும்ரா கூட்டணி 'வேகத்தை' கவனித்துக் கொள்ள, அடுத்து வரும் சகால் (11 விக்..)-குல்தீப் (10 விக்..) கூட்டணி, எதிரணியை உண்டு இல்லை என்று செய்து விடுகின்றனர். இவர்களது இந்த மணிக்கட்டு ஜாலம் ('ரிஸ்ட் ஸ்பின்') இன்றும் தொடர்ந்தால், இந்தியா கிண்ணம் வெல்லலாம்.

**டி வில்லியர்ஸ் வருகை**

இன்று கூடுதல் திட்டத்துடன் களமிறங்கும் தென்னாபிரிக்க அணிக்கு, காயத்தில் இருநது மீண்ட டி வில்லியர்ஸ வருகை வலுச் சேர்க்கலாம்.

தவிர, இதற்கு முன், 'பிங்க்' உடையில் களமிறங்கிய 5 போட்டிகளில் 2 சதம், 2 அரைசதம் (60, 36, 149, 77, 128) விளாசியுள்ளார். இவரது வருகையால் ஜோண்டோ அல்லது மில்லர் என, யாராவது ஒருவர் வழி விட நேரிடும். பொறுப்புத் தலைவர் மார்க்ரம், அம்லா, டுமினி ஓட்டம் சேர்த்தால் நல்லது. பந்து வீச்சில் ரபாடா தவிர, மோர்கலுக்கு மாற்றாக வந்த நிகிடி, பெலுக்வாயோ என, மற்றையவர்கள் ஏமாற்றம் தொடர்கிறது. 'சுழலில்' இம்ரான் தாகிர், டுமினி நம்பிக்கை தருகின்றனர்.

**ஆடுகளம் எப்படி**

ஜொகனஸ்பேர்க் ஆடுகளம் வழக்கமாக வேகப் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும். இங்கு, பந்துகள் நல்ல வேகத்துடனும், பவுன்சராகவும் வரும்.

1

தென்னாபிரிக்க அணிக்கு (118) எதிரான முதல் மூன்று போட்டிகளில் வென்ற இந்திய அணி (122). ஐ.சி.சி., ஒருநாள் தரவரிசையில் 'நம்பர் - 1' இடத்துக்கு முன்னேறியது. இன்றைய போட்டியில் வெல்லும் பட்சத்தில், முதலிடத்தை உறுதி செய்யலாம். 5, 6ஆவது போட்டியில் தோற்றாலும், முதலிடத்துக்கு ஆபத்து வராது.

**'பிங்க் டே'**

கடந்த 2011 முதல் தென்னாபிரிக்கா அணி, ஒவ்வொரு ஆண்டும், மார்பக புற்றுநோய் ('கேன்சர்') விழிப்புணர்வு மற்றும் இதனால் பாதிக்கப்பட்டோர்க்கு உதவும் வகையில், ஆண்டுக்கு ஒரு, ஒருநாள் போட்டியில் பங்கேற்கும். இதில், தென்னாபிரிக்க அணி வீரர்கள் 'பிங்க்' நிற உடையணிந்து விளையாடுவர்.

இந்த வரிசையில் ஆறாவது முறையாக, இன்று போட்டி நடக்கவுள்ளது. இதற்கு முன் நடந்த ஐந்து போட்டிகளிலும், தென்னாபிரிக்க அணி தோற்றது கிடையாது.

## பிரிகேடியர் பிரியங்கவை பதவி நீக்க முடியாது

# தண்டனைகளிலிருந்து தப்பிக்க இராஜதந்திரிகளுக்கு சிறப்புரிமை

## அமைச்சர் நவீன் வக்காளத்து

(கொழும்பு)

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் விவகாரம் தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் நவீன் திஸாநாயக்க கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பிரியங்க பெர்னாண்டோவை இராஜதந்திர பதவியிலிருந்து நீக்க வேண்டுமென பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் ரயான் மற்றும் சியோபயின் மெக்டொனா ஆகியோர் கோரியிருந்தனர்.

இந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் திஸாநாயக்க கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தாம் மறைந்த காமினி திஸாநாயக்கவின் மகன் எனவும், தமது தந்தையை தமிழீழ விடுதலைப் புலிகள் படுகொலை செய்தனர் எனவும் அவர் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலகின் ஏனைய பல நாடுகளைப்போன்றே தமிழீழ விடுதலைப் புலிகள் பிரித்தானியாவிலும் தடை செய்யப்பட்ட இயக்கம் என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

இராஜதந்திரிகளுக்குத் தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் சிறப்புரிமை காணப்படுவதாகவும், தூதரக



வளாகத்திற்குள் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு தண்டனை விதிக்கப்பட முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ தூதரக வளாகத்திற்குள் இருந்து கொண்டு செய்த காரியமொன்றுக்காக அவரைத் தண்டிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி.

### காயத்திரி காசிநாதன்



கடந்த 11.01.2018 அன்று கொழும்பில் காலமான திரு.திருமதி வசந்தசேனன் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் செல்வி சிவானி வசந்தசேனன்(சட்டத்தரணி) அவர்களின் சகோதரியும் திரு.சி.காசிநாதன் அவர்களின் அன்பு மனைவியும் செல்வி மவ்யனாவின் அன்புத் தாயாரும் ஆகிய காயத்திரி அவர்களின் மரணச் செய்தியை அறிந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் மரணச்சடங்கில் கலந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மேலும் பல உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இல.03, ஆஸ்பத்திரி ஒழுங்கை, மாவிட்டபுரம்

சி.வசந்தசேனன் (தந்தை) சட்டத்தரணி,
சி.காசிநாதன் (கணவர்),
சி.வசந்தகுமார் (சிறியதந்தை)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

அன்னை மடியில்
12
04
1953

ஆண்டவன் அடியில்
10
02
2006

ஊரோடு உறவோடு
எம்மனதோடு நீங்காமல்
வாழ்கின்ற தெய்வமே
வானுறைந்தீர்- எம்
மனங்களில் மறைந்திடமால்
நிறைந்து நின்றீர்...!

இல. 147, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

செல்வமாணிக்கம் (ஜோசேப்) குடும்பம்
கம்சனா ஆடையகம் (AJM)


## இராசி பலன்

**மீனம்:** தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கலாம், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

**மேடம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** பெரியோர்களால் பெருமைகள் வந்து சேரும், கடன் தொல்லைகள் குறையும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** காலைநேரத்திலே கலகலப்பான தகவல் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் விருத்தியுண்டு.

**கும்பம்:** என்றோ நடக்குமென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறும், நண்பர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர், ஆரோக்கியமான நாள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சுக், புத | இராசி பலன் கிரகநிலை | | ராகு |
| சூரி, கேது | சந்திராஷ்டமம் கார்த்திகை, ரோகினி இரவு 10.12 மணிக்கு தனு-சந் | | |
| சனி | சந், செவ் | குரு | |

**10.02.2018**

தை 28, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு

தசமி மாலை 5.45 மணிவரை

கேட்டை முன்னிரவு 10.32 மணிவரை

சுபநேரம் 3.34-5.04 மணிவரை

இராகுகாலம் 9.34-11.04 மணிவரை

வளவன்

**கடகம்:** உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், மற்றவர்களின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உறவினர் பகை மாறும்.

**மகரம்:** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், குடும்ப மகிழ்ச்சியுண்டு.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வருவார்கள், பயணங்களால் பலனுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** உடல் நலனில் அக்கறை தேவை, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் சற்றுக் கூடும்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், அரசியல் வாதிகளால் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொலைபேசி வழித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம்,சேமிப்பு உயரும் நாள்.

**கன்னி:** எடுத்த செயலை எளிதில் முடிக்க உடன்பிறந்தவர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், கொள்கைப்பிடிப்புடன் செயற்படுவீர்கள், மனதில் புதிய கற்பனைகள் தோன்றும்.



பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா அண்மையில் நடைபெற்ற போது....

# 63 ஆவது ஆண்டுவிழாவும் மகா சிவராத்திரி விழாவும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 63வது ஆண்டுவிழாவும் மகா சிவராத்திரி விழாவும் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் கழகத்தின் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜானகி தர்மஜீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். வரவேற்புரையை நயினை சி. சோமேஸ்வர பிள்ளையும் ஆசியுரையை ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ. ர. கேசவக் குருக்களும் இவாழ்த்துரையை ஆலய தர்ம பரிபாலன சபை தலைவர் செ.சுப்பிரமணியமும் வழங்குவர்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற நீதிநூல் மனனப் போட்டி,கோலம்போடுதல், மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

அதனைத்தொடர்ந்து சிவராத்திரி நான்கு சாம பூசைகளாக இரவு 8 மணிக்கு 1 ஆம் சாம பூசையும் இரவு 11 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் நள்ளிரவு 12 மணிக்கு 2 ஆம் சாம பூசையும் அதிகாலை 3 மணிக்கு 3 ஆம் சாம பூசையும் அதிகாலை 5 மணிக்கு 4 ஆம் சாம பூசையும்நடைபெறவுள்ளன. (இ-7)

# வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் முதலாவது ஆலோசனைக் குழுக்கூட்டம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் 2018 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் முதலாவது ஆலோசனைக் குழுக்கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் நடைபெற்றது.

வட மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் ஆகிய அமைச்சின் கீழான திணைக்களங்கள் ரீதியான செயற்பாடுகளை வினைத்திறமையுடன் மேற்கொள்வது குறித்த ஆலோசனை நடத்தப் பட்டுள்ளது.





வடக்கு- கிழக்கிலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திற னாளிகள் மற்றும் பொருளாதார இழப்புக்களைச் சந்தித்தவர்கள் என எவராகிலும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போரின் விளைவாகவே பாதிப் பிற்குள்ளாகியுள்ளனர்.

ஆகவே, ஏனைய மாகாணங்களுக்கு ஒதுக்குவதைப் போன்று வடக்கு- கிழக்கு மாகாணங்களுக்கு மத்திய அரசு நிதிகளை ஒதுக்கி வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

விசேட கவனத்திற்குட்படுத்தப்பட்டு வடக்கு- கிழக்கு மாகாணங்களில் செயற்றிட்டங்களை அந்தந்த மாகாண சபையினூடாக முன்னெடுக்க வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற போதிலும் அது குறித்து இதுவரை கருத்திலெடுக்கப்படவில்லை என்று அமைச்சர் அனந்தி சுட்டிக்காட்டினார்.

மகளிர் விவகார அமைச்சர் தலைமையில் நடைபெற்ற இவ் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக விளங்கும் மாகாண சபை உறுப்பினர்கள், மகளிர் விவகார அமைச்சின் செயலர் ஆர்.வரதீஸ்வரன், மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் பொ.வாகீசன், மாகாண தொழிற்றுறைத் திணைக்கள பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் மற்றும் மாகாண சமூக சேவைகள் திணைக் கள பணிப்பாளர்திருமதிஎஸ்வனஜா ஆகியோர் இவ் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரிச்சங்க வடமாகாணக் கிளையின் 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் இ.மி.சபையின் சுன்னாகம் மின் பாவனையாளர் சேவை நிலையத்தில் இ.மி.சபை ஓ.ந. சங்க தலைவர் வ.சுப்பிரமணியம் தலைமையில் இடம் பெற்றது.

இக்கூட்டத்திற்கு இ.மி. சபையின் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் ச.ஞானகணேசன் மற்றும் சுன்னாகம் மின் பாவனையாளர் சேவை நிலைய மின் அத்தியட்சகர் க.நாவேந்தன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்திருந்தனர்.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. நிர்வாகக்குழு தலைவர் வ.சுப்பிரமணியம், உப தலைவர் மு.அமிர்தலிங்கம், செயலாளர் அ.அன்ரன் ஞானப்பரகாசம், பொருளாளர் க.தவராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.(இ-7)



யா/ உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவின் போது அதிபர் இரா.ஜெயக்குமார் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்களால் மாணவர்கள் அழைத்து வரப் படுவதைப் படத்தில் காணலாம்.

# திருக்கேதீஸ்வரம் செல்ல விசேட பேருந்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு 13.02.2018 ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் பயணிகளின் வருகைக்கேற்ப பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பேருந்து சேவைகள் நடைபெறும்.

10.02.2018 ஆம் திகதி தொடக்கம் ஆசனப்பதிவு மேற்கொள்ளலாம். மேலும் 13.02.2018 ஆம் திகதி கீரிமலைக்கும் விசேட பேருந்து சேவைகள் நடைபெறும் என இ.போ.ச.பருத்தித்துறை சாலை முகாமையாளர் க.கந்தசாமி அறிவித்துள்ளார். (இ)



ஈவினை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றபோது... (படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)



குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் போர்க்கன் ஒஸ்லோவின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2017 இல் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் குருநகர் கலையரங்கில் இடம்பெற்றது. சித்தியடைந்த 7 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும், 100 இற்கு மேல் புள்ளிகளைப்பெற்ற மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களையும், கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் படங்களில் காணலாம். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பங்குத்தந்தை அருட்பணி. ம.வி.இ.இரவிச்சந்திரன் அடிகளார், சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி அதிபர் ஏ.மரியதாசன், சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அதிபர் கே.கலியுகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்திய அரசின் 69வது குடியரசுதின நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டும் யாழ். இந்தியத் துணைத்தூதரகம் வழங்கும் மாபெரும்

# பட்டிமன்றம்

நடுவர்

பேராசிரியர் சாலமன் பாப்பையா

**காலம்:** 13 பெப்ரவரி 2018 அன்று மாலை 6.00 மணிக்கு

**இடம்:** கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் ஆலய முன்றலில்

## சமுதாய முன்னேற்றத்திற்கு பெரிதும் துணை செய்வது

அறிவியலே! ஆன்மீகமே!




அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா:54 செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:MSc/பொறியியலாளர்<br>தொ.இ: B/8206 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 70 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BFA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8222 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 39 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/8207 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8223 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/8209 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 20 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: G/8224 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Chartered Accountant<br>தொ.இ: B/8210 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 37செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: G/8225 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ...
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

## மணமக்கள் தேவை

கனடாவில் வசிக்கும் 31 வயதுடைய செவ்வாய்க் குற்றம் உள்ள மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகிறோம்.

கனடாவில் வசிக்கும் 30, 31 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களைத் தேடுகிறோம்.

சொர்க்கம் திருமண சேவை
தொடர்புகளுக்கு: T.P. & Viber:
00164 7504 3336 &
00141 6666 1855
(C-1530)

## Faculty of Management Studies & Commerce
## University of Jaffna-Sri Lanka

# CHANGES IN EXAMINATION DATES

2nd Examination in Business Administration & Commerce
2nd Semester-2016 (New Syllabus)

2nd Examination in Business Administration & Commerce
1st Semester-2016 (Old Syllabus)

Above Examinations are scheduled to be held on 12.02.2018, will be commenced from 15.02.2018 due to unavoidable circumstances.

The timetable of the above examinations can be obtained from the faculty website(http://www.maco.jfn.ac.lk/)

Registrar
University of Jaffna.

(C-1543)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## இராமநாதன் நுண்கலைக்கழகம்

# பல்கலைக்கழக அனுமதி-2017/2018

❖ நுண்கலைமாணி(சங்கீதம்)
❖ நுண்கலைமாணி(நடனம்)/ (பரதநாட்டியம்)
❖ நுண்கலைமாணி(சித்திரமும் வடிவமைப்பும்) ஆகியவற்றில் இளநுண்கலைமாணிப் பட்டப்படிப்புகளைப் பயில்வதற்கான மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்பு மற்றும் செயல்முறைப் பரீட்சைகள்.

❖ மேற்படி நான்குவருடப் பட்டப்படிப்புக் கற்கைநெறிகளுக்குஅனுமதிபெறவிரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 21.02.2018ஆம் திகதிவரைவிண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்**

**அனுமதிக்கான தகைமைகள்**

❖ சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளில் யாதேனுமொன்றைத் தெரிவுசெய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2017 ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த)பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் தெரிவு செய்யவிரும்பும் பட்டபாடநெறிக்குரிய பாடத்தில் அதாவது சங்கீதம் - கர்நாடகம் அல்லது நடனம் - பரதம் அல்லது சித்திரக்கலையில் ஆகக் குறைந்தது திறமைச்சித்தியும் (C),மற்றைய இரண்டு பாடங்களிலும் ஆகக் குறைந்தது சாதாரணதரச் சித்தியும் (S) பெற்றிருத்தல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

❖ மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை உள்ளடங்கிய பரீட்சைக்கு (AptitudeTest)யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தோற்றுதல் வேண்டும்.

❖ இப் பரீட்சைகள் 21.03.2018 புதன்கிழமை தொடக்கம் பத்து நாட்கள் வரை நடைபெறும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

❖ விண்ணப்பதாரிகள் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைத் தரவிறக்கம் செய்து தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

❖ மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளைக்கணக்கு இல. 162100160000880 இற்கு ரூபா 300/= செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த (உ.த) பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரிகள் சுய விலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 23cmx10cm அளவுள்ள கடித உறையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

❖ பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு ஆற்றுகை/ நேர்முகப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்.

❖ பூர்த்திசெய்யப்பட்டவிண்ணப்பங்கள் யாவும் 21.02.2018 ஆம் திகதிக்கு முன்னதாக சிரேஷ்ட உதவிப்பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அனுமதிக்குரியஆகக்குறைந்த தகைமையை கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரங்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத்திகதியில் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(சி-1542)

# பொலிஸ் பாதுகாப்புடன் வாக்குப்பெட்டிகள் நேற்று வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டன


வவுனியா



மன்னார்



முல்லைத்தீவு


கிளிநொச்சி

உள்ளூராட்சி மன்ற தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி,வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. இந்நிலையில் மேற்படி மாவட்டங்களின் பிரதான தேர்தல் அலுவலகங்களில் இருந்து நேற்று காலை தொடக்கம் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இதற்கமைவாக

**வவுனியா**

வவுனியா மாவட்டத்தில் இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான 148 வாக்களிப்பு நிலையங்களுக்குரிய வாக்கு பெட்டிகள் மாவட்ட செயலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 103 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக ஆயிரத்து 43 வேட்பாளர்கள்போட்டியிடுகின்றனர்.

ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 599 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் அவர்கள் வாக்களிப்பதற்குரிய 148 நிலையங்களுக்கும் மாவட்ட செயலகத்தில் இருந்து நேற்று காலை 8 மணி முதல் வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த தேர்தலில் 2ஆயிரம் அரச அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் ஆயிரத்து 500 பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் உள்ள 94 வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் பலத்த பாதுகாப்புடன் வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்றன.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை,நானாட்டான் பிரதேச சபை,முசலி பிரதேச சபை,மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் இடம் பெறவுள்ள நிலையில் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 94 வாக்கெடுப்பு நிலையங்களுக்குமான வாக்குப்பெட்டிகள் மாவட்டச் செயலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

மன்னார் மாவட்டத்தில் 47 வட்டாரங்களில் இருந்தும் 54 உறுப்பினர்களை தெரிவு செய்ய இடம் பெறவுள்ள தேர்தலில் வாக்களிப்பதற்கு 86 ஆயிரத்து 94 பேர் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் 47 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 வாக்குச்சாவடிகளுக்குமான வாக்குப்பெட்டிகள் விநியோக நடவடிக்கைகள் மத்திய நிலையமான கிளிநொச்சி பழைய மாவட்டசெயலகத்தில் நேற்றுக் காலை 7 மணி முதல் நடைபெற்றது. மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சியாளர் இதன் போது கருத்து தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பிரதேச சபைகளுக்குமான தேர்தல் (நாளை) இன்று நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் 40 வட்டாரங்களிலுமிருந்து 86 ஆயிரத்து 734 பேர்வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 638 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றார்கள் அதில் 66 மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையம் கிளிநொச்சி மாவட்டசெயலகமாகும். இம்முறை தேர்தல் பணிகளுக்கென வெளிமாவட்டங்களிலிருந்தும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் வருகைதந்த ஆயிரத்து 500 உத்தியோகத்தர்களும் 300 பொலிஸாரும் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

**முல்லைத்தீவு**

விசேட பொலிஸ் பாதுகாப்புடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 134 வாக்களிப்பு நிலையங்களுக்குமான வாக்குப்பெட்டிகள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இருந்து நேற்றுக் காலை 9.30 மணி முதல் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் இடம் பெறவுள்ள நிலையில் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 134 வாக்கெடுப்பு நிலையங்களுக்குமான வாக்குப் பெட்டிகள் மாவட்டச் செயலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 41 வட்டாரங்களில் இருந்தும் 67 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இம்முறை வாக்களிப்பதற்கு 72ஆயிரத்து 961 பேர் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4-250-281-321)




# 100 வாக்களிப்பு நிலையங்களில் 86ஆயிரத்து 734பேர் வாக்களிக்க தகுதி

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(பரந்தன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நூறு வாக்களிப்பு நிலையங்களில் 86ஆயிரத்து 734 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளனர் என கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரச அதிபருமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச சபைகளுக்கு வட்டாரத்தில் நேரடியாகவும், பட்டியலூடாகவும் 66 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 638 பேர் தேர்தல் களத்தில் உள்ளனர். தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேர்தல் கடமைகளில் ஆயிரத்து 500 அரச உத்தியோகத்தர்களும், 300 பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு விசேட அதிரடிப்படையினர், சிவில் பாதுகாப்பு படையினர் ஆகியோரும் தேர்தல் பாதுகாப்பு கடமையில் ஈடுப்பட்டுள்ளனர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நேற்று வரை 71 தேர்தல் விதிமுறை மீறல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர்கள் வாக்களிக்க செல்லும் போது அவர்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டால் முறைப்பாடு செய்வதற்கும் விசேட மத்திய நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் தொலைபேசி இலக்கமான 021390 0154 இற்கு தொடர்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். வாக்காளர்கள்முடியுமானவரை காலையிலேயே சென்று தங்களது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (2-312-315-281)

# வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தேங்காய் உடைத்து கண்ணீர்மல்க விசேட பிரார்த்தனை





(பனிக்கன்குளம்)

வவுனியாவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று 351 ஆவது நாட்களாக தமது சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சாகும்வரையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் நேற்றையதினம் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டு உறவுகளின் கோரிக்கை நிரா கரிக்கப்பட்டு ஒரு வருடமா வதையிட்டு நேற்றுக் காலை முதல் அடையாள உணவுத் தவிர்ப்பை மேற்கொண்டு இன்று அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நிறை வடைந்து சுழற்சி முறை யிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் தொடர்ந்து இடம் பெறும்.

நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் வவுனியா கந்த சுவாமி ஆலயத்திற்குச் சென்ற காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினால் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக்கூட்டத்தில் காணாமற்போன உறவுகள் எவரும் தங்களிடம் இல்லை, அவர்கள் விரும்பினால் இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளை வெளிப்படுத்தக்கோரியும் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பிரார்த்தனையை மேற்கொண்டு தேங்காய் உடைத்து தமது உறவுகளை வெளிப்படுத்தக்கோரியும் ஆலய வளாகத்தில் கண்ணீர் விட்டு கதறியழுதனர்.

எமது கண்ணீரை வெளிநாடுகள் வந்து பார்க்க வேண்டும். வயதுபோன தாய்மார்கள் பல நாட்களாக உணவுத் தவிர்ப்பு மேடையிலிருந்து கதறியழுவது உங்களுடைய காதுகளில் கேட்க வில்லையா? ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக வந்து இறங்கி எங்களுடைய பிரச்சினைகளில் தலையிட வேண்டும். முருகனும் வேல் எடுத்து போராட்டம் மேற் கொண்டவனே! நீதான் முடிவு எடுக்கவேண்டும் என வும் கதறியழுதனர் உறவுகள். (2-250-281)

# தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி கடமையில் ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள்

## மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான எம்.வை.எஸ்.தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் இன்று நடைபெறும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன.

தேர்தல் கடமைக்காக விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 94 வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

47 வாக்கு எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு 47 நிலையங்களிலும் கடமையாற்றுவதற்கு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த முறை மன்னார் மாவட்டத்தில் சுமார் 86 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஆயிரம் அரச உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் தேர்தல் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்முறை சரியான முறையில் அமைதியாக தேர்தல் நடவடிக்கைகளை எதிர்பார்த்துள்ளோம்.

மன்னார் மாவட்ட மக்களின் பூரண ஒத்துழைப்போடு சிறந்த முறையில் தேர்தல் கடமைகளை மேற்கொள்வார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# 134 வாக்களிப்பு நிலையங்களில் சுமுகமாக தேர்தல் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தி

## முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமுகமான முறையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியென மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நிலைமைகள் தொடர்பில் நேற்றுக் காலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் இன்று நடைபெறவுள்ளது. 41 வட்டாரங்களுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. 134 வாக்கெடுப்பு நிலையங்கள் வாக்களிப் பதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது அதற்கான வாக்குப் பெட்டிகள் மற்றும் அதனோடு இணைந்த அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

70 வாக்கு எண்ணும் நிலையங்களும் 41 பெறுபேறுகளை அறிவிக்கும் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்கு பெட்டிகள் மாவட்ட செயலகத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. பொலிஸாரின் சுற்றுப் பாதுகாப்பு உள்ளிட்ட நிலையில் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-281)




# காணிகள் வழங்கப்படுமிடத்து பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம், திருமுறிகண்டி, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் காணிகள் வழங்கப்படுமிடத்து பேருந்து நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் மற்றும் திருமுறிகண்டி ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் அமைக்கப்படாது கடந்த எட்டு ஆண்டுகளாக காணப்படுவு தால் பேருந்துகளுக்காக காத்திருக்கின்ற மக்கள் மற்றும் வெளியிடங்களில் இருந்து வருகின்ற பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மாங்குளம் பகுதியில் பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டாமையால் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு பயணிக்கின்ற மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பகுதியில் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்குமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையுடன் தொடர்புகொண்டு வினவிய போது, முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், மாங்குளம், திருமுறிகண்டி ஆகிய பகுதிகளில் பேருந்து நிலையங்களை அமைப்பதற்கு பொருத்தமான இடத்தில் பொருத்தமான காணிகளை பிரதேச சபையூடாக கோரியுள்ளோம், குறித்த இடங்களில் காணிகளை வழங்கும் பட்சத்தில் அதற்கான திட்டங்களைத் தயாரித்து நிதிமூலங்களைக் கண்டறிந்து பேருந்து நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# கிராமிய நீர் வழங்கல் திட்ட வேலைகள் ஏப்ரல் மாதத்திற்குள் பூர்த்தியாக்கப்படும்

## 433 குடும்பங்களுக்கு இணைப்புக்கள் வழங்கப்படும்

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் வேலைகள் ஏப்ரல் மாதத்திற்குள் பூர்த்தியாக்கப்பட்டு 433 குடும்பங்களுக்கான இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதென தேசிய வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிராமிய நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கடந்த 2011 ஆம் ஆண்டு அக்கராயன் பகுதியில் கிராமிய நீர் வழங்கல் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப கட்ட கட்டுமானங்களான குடிநீர் பெறும் கிணறு, நீர்த்தாங்கி என்பன அமைக்கப்பட்டு பாடசாலைகள் உள்ளடங்கலாக 60 வரையான இணைப்புக்கள் வழங்கப்பட்டு அதன் மூலமாக குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையையடுத்து அக்கராயன் மத்தி மற்றும் ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கடந்தாண்டிலே மேற்கொள்ளப்பட்டுள்ள குறித்த வேலைத்திட்டமானது மந்தகதியில் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையினுடைய பிராந்திய முகாமையாளரைத்தொடர்பு கொண்டு வினவியபோது, ஏற்கனவே 60 வரையான அமைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. 433 பேருக்கான இணைப்புக்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான இணைப்புக்களை வழங்குவதற்கு மாவட்ட அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டுள்ள 34 மில்லியன் ரூபா நிதியில் குறித்த பகுதிகளுக்கான நீர்க் குழாய்கள் பொருத்தும் பணிகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டு நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களில் ஏற்பட்ட மழை காரணமாக கனரக வாகனங்களைப் பயன்படுத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு முடியாத நிலைமை காணப்பட்டது.

ஆனால் தற்போது அந்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு இணைப்புக்கள் வழங்கப்படுமென பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (2-315)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—144

# நோயெதிர்ப்பு மருந்துகளுக்கெதிராக நோயாக்கிகளின் உருவாக்கம்!




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இன்றைய இக் கட்டுரை இதனை வாசிக்கும் உங்களுக்கு மட்டுமல்ல குடும்ப உறுப்பினர்கள், அயலவர்கள், நண்பர்கள், சிறியவர், பெரியவர் விவசாயப் பெருமக்கள், உணவு தயாரிக்கும் நிறுவனங்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துங்கள். இது உலக சுகாதார நிறுவனத்தின் உலகளாவிய செய்தி. அதனை அனைவருக்கும் தெரியப்படுத்துவது எமது கடமை. தனிமனித சுகாதாரம், குடும்ப சுகாதாரம், இன்னும் சமூக சுகாதாரம் அனைத்தினையும் ஒருமித்து பார்த்தால் சுகாதாரமான வாழ்வுக்கான அடித்தளமிடுவதில் நாம் மிகவும் அக்கறையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

எமது உடலில் பலவகையான நோய்கள் தோற்றம் பெறுகின்றன. எமது உடல் வலி மையைப் பொறுத்து இனந்தெரியாத நோய்களும் எம்மை நோயாளர்களாக ஆக்கி விடுகின்றன.

இதற்காக வைத்தியரை அணுகி நாம் மருந்தெடுத்துக் கொள்கின்றோம். ஆனாலும் பலர் வைத்தியரின் ஆலோசனைகளைப் பெறாமல் தமது அறிவுக்கெட்டியதைப் பயன்படுத்திக் கொண்டு பலவிதமான மாத்திரைகளை தினந்தினம் பயன்படுத்தத் தொடங்கி விடுகின்றனர். இதுவே நாம் இன்று இக் கட்டுரை மூலம் கலந்துரையாடும் விடயத்திற்கு அடித்தள மிட்டிருக்கின்றது.

வைத்தியரின் தகுந்த ஆலோசனையின்றி நாம் மருந்துகளை உள்ளெடுக்கக் கூடாது என்பதனை பலருக்கும் தெரி வியுங்கள். எமது உடலைப் பரிசோதித்த பின்னர் வைத்தியரினால் சிபார்சு செய்யப்படும் மருந்து வகைகள் எமது உடலுக்கு தீங்கு விளைவிக்காது. ஆனால் நாம் அதைவிடுத்து எமக்குத் தெரிந்த ஒருசில மருந்துகளை திரும்பத் திரும்ப பயன்படுத்தும் போது நோயை உருவாக்கும் நுண்ணங்கிகள் தம்மை அந்த மருந்துகளுக்கு இயைவாக்கிக் கொண்டு தமது எண்ணிக்கையை அதிகரிக்கத் தொடங்கிவிடும்.

இதனை ஆங்கிலத்தில் Antibiotic Resistance என அழைப்பார்கள். இவ்வாறு தீமை தரும் நுண்ணங்கிகள் தமது எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நாம் இடமளித்து விட்டால் பின்னர் இவ்வாறான நுண்ணங்கிகளை நாம் எமது உடலில் கட்டுப்படுத்துவதற்கு இயலாமல் போய்விடும்.

நாம் பயன்படுத்தும் நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகள் தேவையற்ற நிலையில், தேவையற்ற வகையில், தேவையற்ற அளவில், இன்னும் தேவையற்ற நேரத்தில் பயன்படுத்தக் கூடாது.

இதனை கவனத்தில் எடுக்காதவர்களுக்கு சாதாரண நோய் வரும்போது கூட பயன்படுத்தும் எந்த மருந்துகளும் பயன்படாது போய்விடுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம். அதனால் இவ்வாறான நிலைமை எவருக்கும் வராமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

சாதாரணமாக ஒருவர் நோய்வாய்ப்படும் போது அவரை வைத்தியரிடம் அழைத்துச் செல்வர். அங்கே வைத்தியரினால் நடத்தப்படும் பரிசோதனைகளின் பின்னர் நோய் இன்னது என கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் அந்த நோயை உருவாக்கும் நுண்ணங்கியை கட்டுப்படுத்த மருந்து வழங்கப்படும்.

ஆனால் நோயாக்கி எதுவெனத் தெரியாமல் நாம் மருந்தினை பயன்படுத்தினால் அங்கிருக்கும் வீரியமற்ற நோயாக்கி பயன்படுத்தப்பட்ட மருந்திற்கு எதிரான தன்மையை தன்னுள்ளே வளர்த்துவிடும்.

இவ்வாறு மருந்திற்கெதிரான இயல்பினை நோயாக்கி நுண்ணங்கிகள் வளர்த்துக்கொண்டால் பின்னர் எந்தக்காலத்திலும் இவ்வாறான மருந்துகளை நாம் பயன்படுத்த முடியாமல் போய் விடும்.

மேலும் பலருக்கு பயன்படுத்தும் மருந்துகளுக்கு ஒவ்வாத தன்மை காணப்படவும் வாய்ப்புண்டு. இவ்வாறு ஒவ்வாத தன்மையினால் வரும் சிக்கல்களுக்கு என்ன செய்வதென்று உங்களுக்கு தெரியாதல்லவா. ஆதலினால் எந்த நோயானாலும் சிறந்த வைத்தியரை அணுகி அவரின் பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் பெற்று நோயிற்கெதிராக தரப்படும் மருந்து வகைகளை அவர்கள் குறிப்பிடும் படி பயன்படுத்தல். நோய்த்தாக்கங்களிலிருந்து எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளலாம்.

விவசாய செய்கையிலீடுபடும் எம்மினிய விவசாயிகளும் இதனை கவனத்திற்கொள்ள வேண்டும். பயிர்களில் நோய்வரும் போது அவற்றினைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் பங்கசு நாசினிகளை தொடர்ந்து விசிறக்கூடாது.

நாம் அவற்றை தேவையற்ற வகையில் பயன்படுத்தினால் அவற்றிற்கெதிராக நுண்ணங்கிகளில் எதிர்ப்புச்சக்தி உருவாகிவிடும். ஆரம்பத்தில் உருவாகும் வீதம் குறைவாக இருந்தாலும் நாள் செல்லச் செல்ல நுண்ணங் கிகளில் இவ்வாறான எதிர்ப்பு தன்மையுள்ளவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கி விடும்.

நுண்ணங்களில் இவ்வாறு எதிர்ப்பு சக்தி உருவானால் அது எமக்கு ஆபத்தாகவே முடிவடைந்து விடும். பெருகும் நுண்ணங்கிகளால் சேதமும் அதிகமாகி அதனால் நாம் பயிர்களின் விளைச்சலை பெறமுடியாமலே போவதுடன் தொடர்ந்து பிரச்சினைகளுக்குள்ளும் முகங்கொடுக்க வேண்டியிருக்கும். ஆதலினால் பயிர்களுக்கு பீடைநாசினிகளை விசிறும் போது தொடர்ந்து விசிறுவதனையோ ஒரே மாதிரியான பீடைநாசினிகளை விசிறுவதனையோ தவிர்க்க வேண்டும்.




கால்நடை வளர்ப்போர் குறிப்பாக கோழி வளர்ப்போர், ஆடு மற்றும் மாடு போன்றவற்றை இறைச்சிக்காக வளர்ப்போர் அவைகளின் தீனிகளில் கலக்கும் நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகள் பற்றி மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

இயன்ற அளவிற்கு இவற்றினைப் பயன்படுத்தாதிருப்பது நல்லது என உலக சுகாதார தாபனம் கேட்டுக்கொண்டிருக்கின்றது. கால்நடை மற்றும் கோழி வளர்ப்போர் இவ்வாறான நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகளை வாங்கி பயன்படுத் துவது நல்லது அல்ல. இதன் தாக் கம் அந்த இறைச்சிகளை வாங்கு வோரில் இருக்கும் என்பதனால் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படும் விலங்குகளில் நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகளுக் கெதிரான நுண்ணங்கிகள் மீண்டும் தாக்கத்தினை ஏற்படுத்தும் போது இவற்றைவிட வீரியமுள்ளதாக மாற்றம் பெறுவதனையும் அதனால் சேதமாக்கும் நுண்ணங்கி களை நாம் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாததாகி விடும்.

ஆக மொத்தத்தில் நுண்ணங்கியெதிர்ப்பு மருந்துகளுக்கெதிராக உருவாகும் நுண்ணங்கிகள் பற்றிய அறிவினை மக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் வேண்டும்.

இதற்காக இலங்கை நுண்ணங்கியியலாளர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை பாடசாலை தோறும் நுண்ணங்கிக்கெதிரான மருந்துகளுக்கெதிரான விடயம் பற்றி கருத்தரங்குகளை நடத்த திட்டமிடுகின்றது.

பாடசாலைகளிலுள்ள விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் விஞ்ஞானம் கற் கும் மாணவர்கள் அனை வருக்கும் வலய மட்டத்தில் இவ்வாறான கல்விசார் கருத் தரங்குகளை நடத்த விரும்பு கின்றனர்.

இந்தச் செய்தியை அனை த்து மாணவர்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும். அறிவுசார் சமூகத்தின் பிரதி நிதிகளான நீங்கள் இதுபற்றி கலந்தாலோசித்து முடிவெடுக்கலாம். இதுபற்றி மேலும் அறிய விரும்புபவர்கள் வலம்புரிக்கு எழுதுங்கள். முயற்சி திருவினையாக்கும்.

# கடற்கரையை சுத்தம் செய்த இராணுவத்தினர்



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 70 ஆவது கடலோரப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடற்கரையை சுத்தம் செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

பாதுகாப்புப் படைகளின் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியின் உத்தரவுக்கமைய 55 ஆவது படைப்பிரிவை சேர்ந்த 160 க்கும் அதிகமான இராணுவத்தினர் கந்தகாடு. சுண்டிகுளம் பகுதி கடற்கரையினை சுத்தம் செய்தனர். (இ-9)

# பிரியங்க தொண்டையைச் சொறிந்தாரே தவிர அச்சுறுத்தவில்லை - மகிந்த புதிய விளக்கம்



(கொழும்பு)

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ தனது தொண்டையைச் சொறிந்தாரே தவிர ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய விளக்கமொன்றைக் கூறியுள்ளார்.

பிரியங்கவை பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டமையானது விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே எனக் குறிப்பிட்ட அவர், புலம்பெயர்ந்த புலிகள் ஆதரவுத் தமிழர்களின் இந்த நடவடிக்கையை இலங்கையிலுள்ள தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்களை நோக்கி கழுத்தை அறுப்பேன் என்ற சைகை மூலம் லண்டனில் இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகச் செயற்படும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

இது குறித்த காணொலி சமூக வலையத்தளங்களிலும் இணையவழி ஊடகங்களிலும் வெளியாகிய நிலையில் அவரைப் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யும் அறிவுறுத்தல்களை இலங்கை வெளிவிவகார அமைச்சு அனுப்பியது.

எனினும் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை மீண்டும் பதவியில் தொடர்வதற்கான பணிப்புரையை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு அமெரிக்க உயர் அதிகாரி தோமஸ் பாராட்டு



(வோஷிங்டன்)

நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கையின் செயற்பாடு பாராட்டுக்குரியது என உயர்மட்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அமெரிக்க சமாதான நிறுவனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய, அமெரிக்க அரச துறை அரசியல் விவகாரங்களுக்கான செயலாளரான தோமஸ்ஏ.ஷனோன் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லிணக்க விடயங்களில் இலங்கையின் முன்னேற்றகரமான செயற்பாடு, இலங்கை- அமெரிக்க இருதரப்பு உறவை மேலும் பலப்படுத்துவதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் ஒரு நண்பராகவும், பங்காளராகவும் செயற்படுவதை எண்ணி தாம் பெருமிதம் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

போருக்குப் பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதற்கான இலங்கைத் தலைமைகளின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப அனைத்து மக்களும் சமாதானமாக செழிப்புடன் வாழ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலநறுவை புராதன சிவாலயத்தில் மகா சிவராத்திரியன்று வழிபாடுகள்


(கொழும்பு)

பொலநறுவை புராதன சிவாலயத்தில் மகா சிவராத்திரி புனித தினத்தில் விசேட பூசை வழிபாடுகளை நடத்த பொலநறுவை சமன்பிட்டி-காமதேனு இந்து சமய வளர்ச்சி மன்றத்தின் தலைவர் பாலன் சுதாகரன், மாமன்றத்தின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்துள்ளார்.

இந்நிகழ்வுகளில் மாமன்றப் பிரதிநிதிகளாக த.மனோகரன், ஆலோசகர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள், சி.த.சி.அருளானந்தன் உள்ளிட்டோர் கலந்து கொள்வர்.

அதேவேளை அகில இலங்கை இந்துமாமன்றத் தலைமையத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பரம்பொருளாம் ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியிலும் நான்கு சாமங்களும் அபிஷேகங்களுடன் மகா சிவராத்திரி பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன என அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் அறிவித்துள்ளார். (இ-7)

# கம்பஹாவில் வாக்குப் பெட்டிகள் விநியோகிக்கும் பணிகள் தாமதம்



(கொழும்பு)

இன்று நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்களிப்பிற்காக கம்பஹா மாவட்டத்திற்கு வாக்குப்பெட்டிகளை விநியோகிக்கும் பணிகளில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் சரியான நேரத்தில் வழங்கப்படாமையே இதற்குக் காரணம் என்று தெரிய வந்துள்ளது.

கம்பஹா மாவட்டத்திற்குரிய வாக்குப் பெட்டிகள் வெயாங்கொடை, சியனே தேசிய கல்வியியற் கல்லூரியின் விஞ்ஞான பீடத்திற்கு நேற்றுக் காலை 8 மணிக்கு கொண்டு செல்லப்படவிருந்தது.

இருப்பினும் முற்பகல் 10 மணி தாண்டியும் வாக்குப் பெட்டிகளை அந்த மத்திய நிலையத்திற்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த வாக்கெடுப்பு நிலையத்தில் கடமைகளில் ஈடுபடவுள்ள அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கைக்கு படையெடுக்கும் இந்திய சுற்றுலாப் பயணிகள்

இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 40 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவராக பணியாற்றி வரும் அரிந்தம் பக்ஸி தனது டுவிட்டர் தளத்தில், இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரியுடன் ஒப்பிடும் போது 2018ஆம் ஆண்டு ஜனவரியில் 40 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

'இலங்கைக்கான மிக முக்கியமான சுற்றுலா மூலமாக இந்தியா இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் 31,173 ஆக காணப்பட்ட சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை இவ்வருடம் ஜனவரி மாதத்தில் 43,643 ஆக அதிகரித்துள்ளது.

எனினும் இலங்கையில் ஆதிக்கம் பெற்றுவருவதாக கூறப்படும் சீனாவின் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் சீனாவில் இருந்து 24,819 சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 12.04.1953

இறைவன் அடியில் 10.02.2006



அமரர் திரு. லோறன்ஸ் அலெக்ஸாண்டர்

ஆலம் விருட்சம் போல் வேரூன்றி விழுது விட்டு
கிளை பரப்பி நிழல் தந்த எங்கள் அன்பு- அப்பாவே
தரணியிலே நாம் வாழ தக்க வழிகாட்டி
சீராக வாழ வைத்த எங்கள் ஆருயிர் அப்பாவே
விதியென்னும் இரண்டெழுத்து உங்களை வேரோடு சாய்த்து
ஆண்டுகள் பன்னிரெண்டு ஆனதே அப்பா
ஆனாலும் ஆறுமோ எங்கள் துயரம் மாறுமோ உங்கள் நினைவு
எங்கள் உயிரோடு ஒன்றிவிட்ட உங்கள் நினைவுகள்
எங்கள் உயிருள்ள வரை நிலைத்திருக்கும் அப்பா!

(அ-1541)

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்,
சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.


# பாரதம்

# விண்வெளியின் முதல் கார் பாதைமாறியது

(கேப் கேனவரல்)

அமெரிக்காவிலிருந்து பால்கன் ஹெவி ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட டெஸ்லா கார், அதன் பாதையில் இருந்து ஆஸ்ரோய்டு பெல்ட் பகுதிக்கு சென்று கொண்டிருக்கிற தகவல்கள் வெளிவந்துள்ளன.

அமெரிக்காவில் புளோரிடா மாகாணம், கேப் கேனவரலில் அமைந்துள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் 'பால்கன் ஹெவி ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்ட ரொக்கெட்டில், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எலோன் மஸ்க்குக்கு சொந்தமான சிவப்பு நிற டெஸ்லா காரை சுமந்து சென்றது.



கார், செவ்வாய் மற்றும் பூமிக்கு இடையேயான சுற்றுப்பாதையில் சுற்றி வரும் வகையில் திட்டமிடப்பட்டு இருந்தது.

6 மாதங்களில் செவ்வாய்க்கு அருகே செல்லும் என்றும் கணிக்கப்பட்டிருந்த நிலையில் அதிக உந்து சக்தி காரணமாக கார் நிர்ணயிக்கப்பட்டு இருந்த தடத்தை கடந்து அதிக தூரம் சென்று விட்டது.

செவ்வாய் சுற்றுவட்டப் பாதைக்கு அப்பால் சென்ற கார், தற்போது விண் வெளியில் மிகவும் தூரமான ஆஸ்ரோய்ட் பெல்ட் பகுதிக்கு சென்று கொண்டிருப்பதாக எலோன் மஸ்க், தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (8-10)

# கோலாகலமாக ஆ





(பியாங்யாங்)

குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென் கொரியாவில் "நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. ஒலிம்பிக் போட்டி போல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

உறைபனியில் நடத்தப்படக்கூடிய விளையாட்டுகள் மட்டும் போட்டியில் அரங்கேறும். 23 ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவில் உள்ள பியாங்யாங் நகரில் நேற்று

# தற்கொலை எண்ணத்தை தடுக்கும் புதிய மென்பொருள் கண்டுபிடிப்பு

## சீன விஞ்ஞானிகள் அசத்தல்

(பீஜிங்)

தற்கொலை எண்ணத்தை தடுக்கும் வகையில் புதிய செயற்கை நுண்ணறிவு மென்பொருளை சீனா வெளியிட்டுள்ளது.

சீனாவில் தற்கொலை என்பது மிகப்பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. குறிப்பாக 15-34 வயது மதிக்கத்தக்கவர்கள் அதிக அளவில் தற்கொலை செய்து கொள்கின்றனர். இதனை தடுக்க சீன அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன் ஒருபகுதியாக புதிய செயற்கை நுண்ணறிவு செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த செயலி சமூக ஊடகங்களில் பொது மக்கள் பதிவு செய்யும் புகைப்படம் கருத்துகளை ஸ்கான் செய்து அவர்களின் மனநிலையை புரிந்து கொள்ளும். அதன்படி 20 ஆயிரம் பயன்பாட்டாளர்களுக்கு இது குறித்த செய்தி அனுப்பப்பட்டது.

தற்கொலை எண்ணம் கொண்ட 4 ஆயிரம் பேர் அந்த செய்திக்கு பதில் அளித்துள்ளனர். மேலும் 8 ஆயிரம் பேர் அதிலுள்ள ஆலோசனை கருவியை பயன்படுத்தி உள்ளதாக அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

இந்த அமைப்பை சீன ஆராய்ச்சியாளர் சூ டிங்ஷா உருவாக்கினார். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள "மனிதர்களுக்கு தற்கொலை எண்ணம் வரும் போது வித்தியாசமான கருத்துகளை பதிவு செய்வர். சிலருக்கு இந்த பிரச்சினை இருப்பது தெரியாது.

ஒன்லைனை அதிகமாக பயன்படுத்துவது அவர்களை தவறான பாதைக்கு கொண்டு செல்லும். இந்த செயலி தற்கொலை எண்ணம் கொண்டவர்களுக்கு மட்டுமல்லாமல் சமூக ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துவர்களுக்கும் அதிக மாக பயன்படும்.

இளைஞர்களுக்கு ஆலோசனை வழங்கி தற்கொலை எண்ணத்தை தடுப்பது வழக்கமான முறையாகும். 20 சதவீதம் மக்களுக்கு மட்டுமே இது பயன்படும். சமூக ஊடகங்களின் மூலம் ஆலோசனை வழங்குவது நல்ல பலனை கொடுக்கும் என தெரிவித்துள்ளார். (8-10)

# அணுவாயுத திட்டத்தை கைவிடும் வரை வடகொரியாவுக்கு தொடர் அழுத்தம்



(கொழும்பு)

அணுவாயுத திட்டத்தை வடகொரியா கைவிடும் வரை வோஷிங்டன் அதிகபட்ச அழுத்தத்தை வழங்கும் என அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் தெரிவித்துள்ளார். சியோலில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் உடனான சந்திப்பின்போது மைக்பென்ஸ் இதனை தெரிவித்துள்ளார்.

கொரிய தீபகற்பத்தின் இலக்கை அடைய வடகொரியாவை பொருளாதார ரீதியாகவும், இராஜதந்திர ரீதியாகவும் தனிமைப்படுத்த வேண்டும் என எனவும் மைக் பென்ஸ் வலியுறுத்தியுள்ளார். (8-10)

# கூகுள் நிறுவனத்திற்கு அபராதம்

(டில்லி)

கூகுள் நிறுவனத்துக்கு 135.86 கோடி ரூபாய் அபராதம் விதித்து இந்தியா போட்டி கண்காணிப்பு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

பிரபல திருமண சேவை இணையத்தளம் வலைத்தளமான கூகுள் தேடு பொறியியல் ஒருதலைபட்சமாக நடந்து கொள்வதாக இந்தியா போட்டிகண்காணிப்பு ஆணையத்தில் புகார் அளித்திருந்தது.

இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில், விசாரணை முடிவில் கூகுள் நிறுவனம் பாரபட்சமாக நடந்து கொண்டது உறுதியானது.

இதையடுத்து அந்த நிறுவனத்திற்கு ரூ.135.86 கோடி அபராதம் விதித்து இந்தியா போட்டி கண்காணிப்பு ஆணையம் உத்தரவிட்டது.

இதுதொடர்பாக, போட்டி கண்காணிப்பு ஆணையம் வெளியிட்டுள்ள செய்தியில், கூகுள் தேடல்களின் முறைகேடுகளில் ஈடுபடுவதைக் கண்டறிந்தது. அவ்வாறு செய்வதன் மூலம், அதன் போட்டியாளர்களுக்கும் பயனர்களுக்கும் பாதிப்பு விளைவிக்கக் கூடும் என தெரிவிந்துள்ளது. மேலும், இந்த அபராதத் தொகையை 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-10)

# பாக்.தீவிரவாத சர்வதேச தீவிர

## அமெரிக்கா

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய மூவரை சர்வதேச தீவிரவாதிகளாக அமெரிக்கா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானை மையமாக கொண்டு செயற்படும் லஷ்கர் இ தொய்பா, தலி

# மாலைதீவு அசாதாரண நிலை அனைத்துக் கட்சி பேச்சுவ

## ஜனாதிபதி அப்துல்லா யாமீன்

(மாலி)

பிரச்சினைக்கு தீர்வுகாண அனைத்து கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக்கு வருமாறு மாலைதீவு அரசு அழைப்பு விடுத்துள்ளது.

மாலைதீவில் கலகத்தில் ஈடுபட்டு வரும் எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் வகையில் ஜனாதிபதி அப்துல்லா யாமீன் அவசர நிலை பிரகடனத்தை செய்தார். மேலும், பல தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அங்கு அசாதாரண நிலை நிலவி வருகிறது.

ஜனாதிபதி எடுத்த நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. குறிப்பாக அமெரிக்கா மாலைதீவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்தியாவும், மாலைதீவின் மீது பாராமுகமாக உள்ளது.

இவ்வாறு பல்வேறு நாடுகளும் எதிர்ப்பு தெரிவிப்பதால் மாலைதீவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகளுடன் சமாதானமாக சென்று பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் மாலைதீவு ஜனாதிபதி இறங்கியுள்ளார்.

இதற்காக அவர் அனைத்து கட்சிகளையும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து அறிவிப்பு வெளி



யிடப்பட்டுள்ளது. மாலைதீவு மக்களின் நலன்கருதி தற்போது நிலவும் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று விரும்புகிறோம்.

எப்போது அந்த பேச்சுவார்த்தை நடைபெறும் என்ற விபரங்கள் அதில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இந்த பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ளுமா? என்று கேள்வி எழுந்துள்ளது.

இதுபற்றி எதிர்க்கட்சி தரப்பினர்

# வெளிநாடு

## க ஆரம்பமானது குளிர்கால ஒலிம்பிக்போட்டி



வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 25 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இந்தப் போட்டியில் ஐஸ் கொக்கி, பனிச்சறுக்கு, ஸ்கேட்டிங் உட்பட 15 வகையான விளையாட்டுகள் இருபாலாருக்கும் நடத்தப்படுகிறது. இதில் இந்தியா, அமெரிக்கா, ஆர்ஜென்டீனா, அவுஸ்திரேலியா, பிரேசில், சிலி, கனடா, ஜேர்மனி, இங்கிலாந்து, ஜப்பான், மலேசியா, நியூசிலாந்து, நெதர்லாந்து உட்பட 92 நாடுகளை சேர்ந்த 2,952 வீர-வீராங் கனைகள். கலந்து கொள் கிறார்கள்.

தென்கொரியாவில் நடைபெறும் இந்தப் போட்டியில் அதன் எதிரி நாடான வட கொரியாவும் பங்கேற்கிறது. தொடக்க விழாவில் இரு அணிகளும் இணைந்து அணி வகுத்துச் செல்ல இருப்பது சிறப்பம்சமாகும்.

அத்துடன் ஐஸ் கொக்கி பெண்கள் போட்டியில் இரு நாட்டு வீராங்கனைகளும் இணைந்து ஒரே அணியாக கொரியா என்ற பெயரில் களம் இறங்குகிறார்கள். தென் கொரியாவில் குளிர் கால ஒலிம்பிக் போட்டி நடை பெறுவது இது முதல்முறையாகும்.

1988ஆம் ஆண்டில்தென் கொரிய தலைநகர் சியோலில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்று இருந்தது குறிப்பிடத்தக்கது. (8-10)

## மாலைதீவு விவகாரம்
# ட்ரம்ப் - மோடி ஆலோசனை

(வோஷிங்டன்)

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், மாலைதீவு விவகாரம் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.



மாலைதீவில் அரசியல் நெருக்கடியும் குழப்பமும் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி அப்துல்லா யாமீன் தன் பதவிக்கு ஆபத்து ஏற்படும் என்பதால் உச்ச நீதிமன்ற தீர்ப்பை ஏற்க மறுத்ததுடன், அதிரடியாக அவசர நிலையை பிரகடனம் செய்து அரசு அலுவலகங்கள் அனைத்தும் இராணுவம் மற்றும் போலிஸாரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மவு மூன் அப்துல் கயூம், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அப்துல்லா சயீத், நீதிபதி அலி ஹமீது உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டதால் பதற்றம் நிலவி வருகிறது.

இது ஒருபுறமிருக்க அரசுக்கு எதிரான போராட்டங்களை இராணுவம் ஒடுக்கி வருகிறது. மாலைதீவில் அமைதி ஏற்படுத்த ஐ.நா. சபை மற்றும் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் அமைதியை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளன.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் தொலைபேசியில் உரையாடினார். மாலைதீவில் நிலவும் அரசியல் நெருக்கடி குறித்து இரு தலைவர்களும் கவலை தெரிவித்தனர்.

மேலும்ஜனநாயக அமைப்புகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு தொடர்ந்து ஆதரவு அளிப்பதாக கூறியுள்ளனர். பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் செழிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக தொடர்ந்து இணைந்து செயலாற்ற வேண்டும் என இருவரும் உறுதி அளித்துள்ளனர்.

வடகொரியா அரசு அணு ஆயுதங்களை அழிப்பதைஉறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்தும் இருவரும் ஆலோசித்தனர். இத்தகவலை வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (8-10)

## வாத அமைப்புடன் தொடர்பு
## தீவிரவாத பட்டியலில் மூவர்
# க்கா அதிரடி

பான் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு வைத்திருந்த மூன்று தனிநபர்களை சர்வதேச தீவிரவாதிகளாக அமெரிக்கா நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

ரஹ்மான் செப்பகிர் முகமது, ஹிஸ் உல்லா அஸ்தம் கான் மற்றும் திலாவர் கான் நதிர்கான் ஆகியோர் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அமெரிக்க தீவிரவாதம் மற்றும் நிதி நுண்ணறிவு செயலாளர் சிகல் மண்டேல்கர் தெரிவிக்கையில்,

"மூன்று பேருக்கு விதிக்கப்பட்ட தடை அல்கொய்தா, லஷ்கர் இ தொய்பா, தலிபான் மற்றும் இதர தீவிரவாத குழுக்களுக்கு நிதியுதவி செய்வதை தடுக்கும் நோக்கத்தின் ஒரு பகுதியாகும்.


அபாயகரமான தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு அடைக்கலம் தருவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்" எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (8-10)

# தெற்கு சூடான் ஆயுதக் குழுவில் இணைந்த ஆயிரம் சிறுவர்கள் ஐ.நாவால் மீட்பு

தெற்கு சூடானில் ஆயுதக் குழுக்களில் சேர்க்கப்பட்டிருந்த 300இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தெற்கு சூடானில் அரசுப் படையினருக்கும், எதிர்க் கட்சிகளின் படையினருக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

இந்தப்போரில், தங்களுடன் இணைந்து போரிடுவதற்காக 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை இரு தரப்பு ஆயுதக் குழுவினரும் தங்களது படைகளில் வலுக்கட்டாயமாகச் சேர்த்து வருவது



சர்வதேச அளவில் கடும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

தெற்கு சூடானில் ஆயுதக் குழுக்கள் 19000 சிறுவர்களை கட்டாயமாக போரிட வைப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஐ.நா. மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் விளைவாக 300 இற்கும் மேற்பட்ட சிறுவர்களை விடுவிக்க ஆயுதக் குழுக்கள் ஒப்புக் கொண்டன.

அதன் தொடர்ச்சியாக, 224 சிறுவர்கள், 87 சிறுமிகள் படையிலிருந்து விடுவிக்கப்படும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த சிறுவர்கள் தங்கள் குடும்பத்தினரிடம் திரும்ப ஒப்படைக்கப்படுவார்கள் என ஐ.நா. அதிகாரிகள் கூறினர். ஆயுதக் குழுக்களிடமிருந்து ஐ.நா. இதுவரை சுமார் 1,000 சிறுவர்களை மீட்டுள்ளது.

விரைவில் மேலும் பல சிறுவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (8-10)

## லைக்கு தீர்வு
## சுவார்த்தை
# மீன் அழைப்பு

தெரிவிக்கையில், நாங்கள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைக்கு செல்ல விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள இங்கிலாந்து, ஜேர்மன் மற்றும் ஐரோப்பிய நாட்டு தூதர்கள் மாலைதீவு சென்றுள்ளனர். அவர்கள் மாலைதீவு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்கள் சந்திப்பதற்கு அனுமதி கிடைக்கவில்லை. வெளியுறவுத்துறை செயலாளரை மட்டும் அவர்கள் சந்தித்தனர். ஜனாதிபதி, அமைச்சர்கள், சபாநாயகர் ஆகியோரை சந்திப்பதற்காக அவர்கள் அனுமதி கேட்டு காத்திருக்கிறார்கள்.

மாலைதீவில் நிலவும் பிரச்சினை குறித்து தெற்காசிய மனித உரிமை அமைப்பும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ஜனநாயக விரோதமாக மாலைதீவு செயற்படுவதாக குற்றம் சாட்டியுள்ளது. (3-10)

# அமெ. கூட்டுப் படையினரின் தாக்குதல் போர்க்குற்றம்; விசாரணை நடத்தக்கோரி ஐ.நா.சபைக்கு சிரியா கடிதம்

(பெய்ரூட்)

சிரியா நாட்டின் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்திய தாக்குதல் போர்க்குற்றம் என அந்நாட்டு அரசு குற்றம் சாட்டியுள்ளது.

சிரியா நாட்டின் பகுதிகளை ஐ.எஸ். அமைப் பினர் கைப்பற்றி தீவிரவாதிகள், பொது மக்களை குறி வைத்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக சிரியா நாட்டுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா தலைமையிலான ஜிகாதி ஒழிப்பு படையினர் தொடர்ந்து வான்வழி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, அமெரிக்கா தலைமையிலான இந்த கூட்டுப் படையினர் சிரியா ஜனாதிபதியின் ஆதரவு படையினருக்கு எதிராக தற்காப்புக்காக நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 100 வீரர்கள் கொல்லப்பட்டு உள்ளனர் என தகவல் வெளியானது.

இந்நிலையில், இந்த படுகொலையை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும். அமெரிக்கா தலைமையிலான கூட்டு படையினர் நடத்திய தாக்குதல்ஒரு போர்க்குற்றம் என்று சிரியா அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சிரியா நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் எழுதியுள்ளது. அந்த கடிதத்தில், அமெரிக்கா தலைமையிலான கூட்டு படையை சட்டவிரோதம் என்றும், அதனை கலைக்க வேண்டும் எனவும் சிரியா அரசு கோரியுள்ளது. (8-10)



## 'சரியான சமிக்ஞையையே காண்பித்தாராம்'

# கழுத்தறுக்கும் பிரிகேடியருக்கு அமைச்சர் ருவான் ஆதரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர்களுக்கு பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, சரியான சமிக்ஞையையே காண்பித்துள்ளார் என்றும் அதற்காக அவரை ஆதரிப்பதாகவும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி தலையிட்டு பிரித்தானியாவிலேயே இருக்குமாறு அவரைக் கேட்டுள்ளார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

விடுதலைப் புலிகள் ஆதரவு குழுவுக்கு அவர் காண்பித்த சமிக்ஞைக்காக பிரிகேடியருக்கே எனது வாக்கு. அவருக்கு நன்றி கூறுகிறேன்.

அங்கு எதிர்ப்புத் தெரிவித்த விடுதலைப் புலிகள் எவருமே. இலங்கைக்கு வந்தவர்களில்லை என்று நினைக்கிறேன்.

அவர்கள் பல்வேறு அமைப்புகளுக்காக நிதி சேகரிக்கிறார்கள். அவர்கள் தமிழர்களை நேசிப்பதில்லை" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அலோசியஸ், பலிசேனவின் பிணை உத்தரவு 16ம் திகதி





(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோஷியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோர் தொடர்பிலான பிணை உத்தரவு எதிர்வரும் 16ஆம் திகதி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன நேற்று இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

முறைப்பாட்டின் எழுத்து மூல அறிக்கையை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உதயங்க விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தகவல் இல்லை-பொலிஸ் பேச்சாளர்

(கொழும்பு)

டுபாய் சர்வதேச பொலிஸாரின் அனுமதியுடன் தான் விடுதலை செய்யப்பட்டதாக ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க நேற்று முன்தினம் தனது பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் டுபாய் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸுக்கு எந்தவிதமான அறிவித்தலும் கிடைக்கப்பெறவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர நேற்று முன்தினம் மாலை தெரிவித்துள்ளார்.





கைது செய்யப்பட்டு அபுதாபியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உதயங்க வீரதுங்கவை இலங்கைக்கு கொண்டுவருவது தொடர்பில் அந்நாட்டு அதிகாரிகளுடன்கலந்துரையாடுவதற்கு 7 பேர் கொண்ட குழு அபுதாபியை நோக்கி புறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2005-2006 ஆம்ஆண்டு காலப்பகுதியில் மிக் விமானக் கொள்வனவில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துப்பாக்கிச் சூட்டுச் சந்தேக நபர்களின் மோட்டார் சைக்கிள் சிக்கியது

(கொழும்பு)

கம்பஹா நெதகமுவ போகஸ்கஹ பகுதியில் கடந்த 4ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சந்தேகநபர்களால் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெயாங்கொடை பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு அருகிலிருந்து குறித்த மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு ஊடாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார்மேலும்தெரிவித்துள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கம்பஹா நெதகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய சமிந்த எனப்படும் சமி என்பவர் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது (இ-7)

## இன்று ஒரு தகவல்

### எதையும் கேட்டுவிட்டு...

என் சகோதரிகளின் வீட்டிற்குச் செல்ல நேரும் போது ஒரு போன் செய்ய வேண்டும் என்றால்கூட அவர்களைக் கேட்டு விட்டுப் போன் செய்வதுதான் என் இயல்பாக இருந்து வருகிறது.

என் சகோதரிகள் சற்றே கேலி செய்வது உண்டு. எதற்கு இதையெல்லாம் போய்க் கேட்டுக்கொண்டு? என்பார்கள். நான் வெளியூருக்குப் போன் செய்தால் கூட அது பிரச்சினைக்குரிய விடயமாக ஆகிவிடாது என்பது எனக்கு நன்கு தெரியும்.

ஆனாலும்அவர்களுடையஎல்லைக்குள் அவர்களுக்குத் தெரியாமல் எதுவும் நிகழ்ந்துவிடக்கூடாது. உள்ளூர்த் தொலைபேசிக்கே கேட்டுவிட்டுத்தான் பேச வேண்டும் என்கிற உணர்வு என்னுள் ஆழமாகப் பதிந்துவிட்டது.

போன் என்றால் எதுவாக இருந்தாலும் இப்படிக் கேட்டுவிட்டுச் செய்கிறபோது நமக்கு முழு உரிமை வந்து விடுகிறது. அவர்களுக்கும் நம் செயல்களில் உள்ள சிறு ஆட்சேபம்கூட நீங்கிவிடுகிறது. எல்லாவற்றையும் விட இது ஓர் அடிப்படையிலான மனிதப் பண்பு.

மற்றவர்களிடம் கேட்டுக் கொள்வது என்பது உரிமையை இழப்பது அல்ல, அது உரிமையை உறுதி செய்து கொள்வது. ஒருவரிடம் அனுமதி கேட்டுக் கொள்ளும் போது அவருடைய ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைக்க ஆரம்பிக்கிறது. இது நமக்கு ஒரு பெரிய பலம். கேட்டுக் கொள்ள நினைக்கிறவர்களுக்கு இன்னும் சில வார்த்தைகள்...

முக்கியமான முடிவுகள் விடயத்தில் கடைசி நிமிடம் கேட்கக்கூடாது. இது ஒப்புக்குக் கேட்பது என்கிற ரகத்தில் சேர்ந்தது.

கிட்டத்தட்ட கேட்காமல் செயற்படுவதற்கு இணையானது என்றாகிவிடும்.

ஒன்றைக் கேட்கும் போது கிடைக்கும் பதில்களை மேலோட்டமாக எடுத்துக் கொள்ளாமல் அவர்கள் சொன்ன பதில்களை வைத்து அது என்ன அர்த்தத்தில் சொல்லப்பட்டது என்று சரியாக எடைபோட வேண்டும்.

சம்மதம் சொன்னால் கூட அது முழுச் சம்மதமா? அரைகுறைச் சம்மதமா? வேறு வழியில்லாமல் சொல்லும் சம்மதமா என்பதையெல்லாம் தெரிந்து கொள்வது அவசியம்.

இவற்றோடு யாரிடம் எப்படிக் கேட்டால் சம்மதம் பெற முடியும். விடயம் எடுபடும் என்பதையும் தெரிந்து வைத்துக் கொள்வது மிக நல்லது.

**லேனா தமிழ்வாணன்**

# போர்க்குற்றச்சாட்டுக்களிலிருந்து மகிந்தவை காத்தது ஐ.தே.கவே

## அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)


ஜெனிவாவில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே, போர்க்குற்றச்சாட்டுக்களில் இருந்து மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றியது என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.



மாத்தறை, உயன்வத்தவில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "ஜெனிவாவில் மாத்திரம் அரசாங்கம் வெற்றி பெற வில்லை. ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீளப் பெற்றிரு க்கிறோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன் ஏற்றுமதி தடையை நீக்கச் செய்திருக்கிறோம்." என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஒரே மேடையில் 'அரசியல் முக்கோணம்'



(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகளின் போது, ஒருவர் மீது ஒருவர் கடுமையான குற்றச்சாட்டுகளையும், விமர்சனங்களையும் முன் வைத்த இலங்கை அரசியல் தலைவர்கள் மூவரும் நேற்றுமுன்தினம்ஒரே மேடையில் அமர்ந்திருந்தனர்.

யானை தாக்கியதால் படுகாயமடைந்து, மாரடை ப்பு ஏற்பட்டு மரணமான பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரரின் இறு திச் சடங்கு நேற்று முன்தினம் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில்விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஒரே மேடையில் அருகருகே அமர்ந்திருந்தனர்.

சில நாட்களுக்கு முன்னர் தேர்தல் பரப்புரை களில் இவர்கள் ஒருவர் மீது ஒருவர் கடுமையாக விமர்சித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அவன்கார்ட், ரக்னாலங்கா வழக்கு விசாரணை திகதி அறிவிப்பு

(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஷ்ஷங்க சேனாதிபதி மற்றும் ரக்னாலங்கா நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பாலித பிரணாந்து ஆகியோருக்கு எதிரான வழக்கை மீண்டும் எதிர்வரும் 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நேற்றுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி குருசிங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012-2014 ஆகிய வருடங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய ஊழல் மோசடி சம்பவங்கள் தொடர்பில் இவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

## கொள்கலனால் ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு - சிலாபம்பிரதான வீதியில் கல்கந்த புகையிரத கடவைக்கு அருகில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொள்கலன் ஒன்று வீதியில் பயணித்த ஒருவர் மீது மோதியமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் 65 வயதுடைய வயோதிபரொருவராவார்.

இவ்விபத்து தொடர்பில் கொள்கலன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பிரிட்டனில் பாதுகாப்புக்கோரி 845 இலங்கைத் தமிழர்கள்

(கொழும்பு)

பிரித்தானியாவில் முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உட்பட 845 இலங்கைத் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்தாண்டு இவ்வாறு பாதுகாப்பு கோரப்பட்டுள்ளதாக அந்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இவர்களில் நூற்றுக்கு 6 வீதத்திலானோருக்கு மாத்திரமே அரசியல் பாதுகாப்பு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏனையவர்கள் சமர்ப்பித்த அரசியல் பாதுகாப்புக் கோரும் விண்ணப்பங்கள் இன்னமும் ஆய்வு செய்யப்படுவதாக பிரித்தானிய உள்நாட்டு அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசியல் பாதுகாப்பு கோரியவர்களில் தாம் இலங்கை இராணுவத்தினரால் சித்திரவதைக்கு உள்ளாவதாக 50 பேர் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளதாக குறித்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# போலி வாக்குச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன

## பொலிஸார் தகவல்

(கொழும்பு)

குருநாகல் வெஹர பகுதியில் அச்சிடப்பட்டு கொண்டிருந்த போலி வாக்குச் சீட்டுக்கள் நேற்றுக்காலை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை வாக்களிப்பு நிலையங்களுக்கோ அல்லது வாக்கு எண்ணும் மத்திய நிலையங்களுக்கோ மது போதையில் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# இராணுவம் நடத்தும் பாடசாலைகளை கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கவும்

## இலங்கைக்கு ஐ.நா.குழு வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினால் நடத்தப்படும் பாடசாலைகளை உடனடியாக கல்வி அமைச்சிடம் ஒப்படைக்க வேண்டும் என்று, ஐ.நா. குழு வலியுறுத்தியுள்ளது.

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா. குழு, இலங்கை தொடர்பான கண்டறிவுகள் குறித்து நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் ஜனவரி 15 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 2 ஆம் திகதி வரை நடந்த சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐ.நா. குழுவின் கூட்டம் இடம்பெற்றிருந்தது.

இதில் இலங்கை, குவாட்டமாலா, பனாமா, சிஷெல்ஸ், ஸ்பெய்ன், சொலமன் தீவுகள், பாலோ மற்றும் மார்ஷல் தீவுகளில் சிறுவர்களின் நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தின் முடிவில் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"இலங்கை இராணுவத்தினர் நடத்தும் பாடசாலைகளை கல்வி அமைச்சிடம் கையளிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

கடற்படையணிக்கான பயிற்சியை இராணுவச் செயற்பாடுகளுக்குள் உள்ளடக்கக் கூடாது.

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான, றோம் உடன்பாடு மற்றும் ஜெனிவா பிரகடனங்கள் தொடர்பான மேலதிக நெறிமுறைகளை ஏற்றுக்கொள்வது குறித்து கவனத்தில் கொள்ள வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

# ஐந்து மாணவர்கள் கடத்தப்பட்ட கறுப்பு கார் கடற்படைத் தலைமையகத்தில் ஒரு வருடமாக தரிப்பு

## சி.ஐ.டி.விசாரணைகளில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தி காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், கடத்தப்படும் போது 5 மாணவர்களும் பயணித்த கறுப்பு நிறக் கார் தொடர்பில் முக்கிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த தகவல்களை மையப்படுத்தி விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவு தீவிரப்படுத்தியுள்ளது. அதன்படி கறுப்பு நிற இண்டிகோ ரகத்தை சேர்ந்த குறித்த கார், 2008.09.17 ஆம் திகதி மாணவர்களுடன் சேர்த்து கடத்தப்பட்ட பின்னர், சுமார் ஒரு வருடமாக கடற்படைத் தலைமையகத்தில் அதி பாதுகாப்பு வலயமான கடற்படைத் தளபதியின் வாகனம் தரித்து வைக்கப்படும் இடத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை, பின்னர் அது தர்மதாஸ எனும் சந்தேக நபராக கிரி உல்ல நகரில் வைத்து இரண்டாம் சந்தேக நபர் ரணசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டமை தொடர்பில் சி.ஐ.டிக்கு தகவல் கிடைத்துள்ளது.

எவ்வாறாயினும் கிடைக்கப்பெற்ற தகவல்களை மையப்படுத்தி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா நேற்று முன்தினம் கோட்டை நீதவான் லங்கா ஜயரத்னவுக்கு அறிவித்தார்.

அத்துடன் இந்த விவகாரத்தில் கடத்தல், கப்பம் கோரல், காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் பூரணமாக அறிந்திருந்த நிலையில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட அதனை மூடி மறைத்துள்ளதாகவும் 2013 ஆம் ஆண்டு 2 ஆம் சந்தேக நபர் கொமாண்டர் ரணசிங்க தனது சட்டத்தரணி ஊடாக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வந்து இந்த விவகாரத்தில் இருந்து தனைக் காப்பாற்ற கோரியதாகவும் விசேட விசாரணை அறிக்கை ஊடாக பொலிஸ் பரிசோதகர் கோட்டை நீதவானுக்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்த விவகாரத்தில் இதுவரை கைது செய்யப்பட்ட 9 பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள காமினி, மெண்டிஸ் ஆகிய இரு முன்னாள் கடற்படை புலனாய்வாளர்களையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்க உத்தரவிட்ட நீதவான் அன்றைய தினம் இது குறித்த வழக்கை விசாரணைக்கு எடுக்கவுள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் உத்தரவுக்கு அமைவாக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரட்னவின் ஆலோசனைக்கு அமைய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நாகஹமுல்லவின் வழிகாட்டலின் கீழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் சானி அபேசேகரவின் நேரடி கட்டுப்பாட்டில் உதவி பொலிஸ் அத்தியட்சர் திசேரா, புலனாய்வு பிரிவின் கூட்டுக் கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஸாந்த டீ சில்வா தலைமையில் முன்னெடுக்கப்படும் இருவேறு விசாரணைகளில் இந்த பிரதான கடத்தல்கள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, தெஹிவளை, வத்தளை மற்றும் கட்டுநாயக்க உள்ளிட்ட பல பிரதேசங்களில் பல்வேறு உத்திகளை கையாண்டு இந்த கடத்தல்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக தெஹிவளையில் 2008.09.17 அன்று பெர்னாண்டோ மாவத்தையில் உள்ள அலி ஹாஜியார் அன்வர் என்பவரது வீட்டில் வைத்து அவரும் ரஜீவ நாகநாதன், பிரதீப் விஸ்வநாதன், திலகேஸ்வரன் ராமலிங்கம், மொஹம்மட் திலான், மொஹம்மட் சாஜித் ஆகிய ஐந்து மாணவர்களும் கடத்தப்பட்டிருந்தனர். இதனைவிட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கஸ்தூரி ஆரச்சிலாகே ஜோன் ரீட், அரிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த அமலன் லியோன் மற்றும் ரொஷான் லியோன், கொட்டாஞ்சேனையை சேர்ந்த அன்டனி கஸ்தூரி ஆராச்சி, திருகோணமலையை சேர்ந்த தியாகராஜா கஜன் உள்ளிட்டோரும் கடத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கடத்தப்பட்ட அனைவரும் திருகோணமலை கடற்படை தளத்தில் உள்ள இரகசிய வதை முகாமான கன்சைட் எனும் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையை குற்றப் புலனாய்வாளர்கள் கண்டு பிடித்தனர்.

சிறப்பு புலனாய்வு பிரிவின் பொறுப்பாளராக கடமையாற்றியிருந்த லெப்டினன் கொமான்டர் சம்பத் முனசிங்க, கன்சைட் நிலத்தடி இரகசிய வதை முகாமின் பொறுப்பாளராக அப்போது இருந்த சுமித் ரணசிங்க, கடற்படை சிப்பாய் லக்ஷ்மன் உதயகுமார, நலின் பிரசன்ன விக்ரமசூரிய, தம்மிக தர்மதாஸ , கித்சிறி மற்றும் சிறப்பு புலனாய்வு பிரிவின் பணிப்பாளராகவும் கடற்படை ஊடகப் பேச்சாளராகவும் அப்போது பதவி வகித்த கொமாண்டர் டி.கே.பி. தஸநாயக்க ஆகியோர் கைது செய்யப்பட்டு பிணையில் உள்ள நிலையில் விளக்கமறியலில் உள்ள கடற்படை புலனாய்வுப் பிரிவின் முன்னாள் வீரரான கஸ்தூரிகே காமினி, அருணதுஷார மெண்டிஸ் ஆகியோர் நேற்று முன்தினம் சிறை அதிகாரிகளால் மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதன்போது மன்றுக்கு விசாரணை அறிக்கையை தாக்கல் செய்த பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா, அவ்வறிக்கையில் தெரிவித்திருந்ததாவது,

கடந்த 2009.05.28 ஆம் திகதி முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு முறைப்பாடளிக்கும் போது, இந்த 11 பேரின் கடத்தல், தடுத்து வைப்பு, காணாமல் ஆக்கப்பட்டமை, கப்பம் கோரியமை தொடர்பில் பூரணமாக அறிந்திருந்துள்ளார். அத்துடன் லெப்டினன் கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு எதிராக முறைப்பாடு செய்தபோதும் அவருடன் ஒன்றாக ஒரே அறையில் தங்கியிருந்த லெப்டினன் கொமாண்டர் ஹெட்டி ஆரச்சி என்பதையும் அறிந்திருந்தார். அத்துடன் ஹெட்டி ஆரச்சியை மேற்பார்வை செய்தவர் கொமாண்டர் டி.கே.பி. தசநாயக்க என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனினும் இவற்றை அவர் மூடி மறைத்தே முறைப்பாட்டை செய்துள்ளார்.

இதனைவிட இந்த விவகாரத்தில் இரண்டாம் சந்தேக நபர் கொமாண்டர் சுமித் ரணசிங்க, கடந்த 2013 ஆம் ஆண்டு மாலை வேளை ஒன்றில் தனது சட்டத்தரணியுடன் அப்போது குற்றப் புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சரும் தற்போது சி.ஐ.டி. பணிப்பாளருமான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை சந்திக்க வந்தார். அப்போது அவரால் புரியப்பட்ட யுத்த பங்களிப்பு குறித்து விளக்கப்பட்ட நிலையில், பின்னர் இந்த கடத்தல்களை லெப்டினன் கொமாண்டர் சம்பத் முனசிங்க செய்ததாகவும் பின்னர் அவர் அவர்களை தன்னிடம் கையளித்ததாகவும், பின்னர் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டதாகவும் கூறினார். எனினும் இதற்கு சம்பத் முனசிங்கவே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் தன்னை விடுவித்து இந்த விசாரணைகளை முன்னெடுக்குமாறும் சட்டத்தரணி ஊடாக ரணசிங்க பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனைவிட கடத்தப்பட்ட மாணவர்கள் பயணித்த ரஜீவ் நாகநாதனுக்கு சொந்தமான கார் தொடர்பில் முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன. அதனை மையப்படுத்தி விசாரணை இடம்பெறுகின்றது. என குறித்த விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இந்த விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவில் இருந்து வேறு ஒரு பிரிவுக்கு மாற்றுமாறு கோரும் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி அசித் சிரிவர்தன, அது தொடர்பில் நேற்று முன்தினம் எழுத்து மூல வாதங்களை சமர்ப்பித்தார்.

இந்நிலையில் அது குறித்த தீர்மானத்துக்காகவும் விளக்கமறியல் தொடர்பிலான் உத்தரவுக்காகவும் வழக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (இ-7)

# மகளிர் அமைச்சின் செயலாளருக்கும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தலைவிக்கும் இடையில் முரண்பாடு



(கொழும்பு)

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளரினால் அண்மையில் கூட்டப்பட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை கூட்டம் சட்ட ரீதியானதல்ல என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி சட்டத்தரணி மரினி டி லிவேர்ரா தெரிவித்தார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் பணிப்பாளர் சபை கூட்டத்தை கூட்டுவதற்கான அதிகாரம் இருப்பது அதன் தலைவருக்கே என்பதுடன், அதற்கு தலைமை தாங்க வேண்டியது தலைவரே என்றும் அவர் கூறியுள்ளார்.

அவ்வாறிருக்கின்ற போதிலும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளரால் கடந்த 7 ஆம் திகதி பணிப்பாளர் சபை கூட்டம் கூட்டப்பட்டிருந்ததுடன், அந்தக் கூட்டம் சட்ட ரீதியானதல்ல என்பதால் தான் அதில் கலந்து கொள்ளவில்லை என அவர் கூறினார்.

இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் பணிப்பாளர் சபை கூட்டத்தை கூட்டுவதற்கு தான் எடுத்த முயற்சிகளை, அமைச்சின் செயலாளர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுத்து தடுத்திருந்ததாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி சட்டத்தரணி மரினி டி லிவேர்ரா கூறினார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் குறித்து மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் சந்திராணி சேனாரத்னவிடம் அததெரண வினவிய போது, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி சுமத்தும் குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக கூறினார்.

இதுவரை மூன்று தடவைகள் பணிப்பாளர் சபை கூட்டம் இடம்பெற்றுள்ளதாகவும், அந்தக் கூட்டங்களுக்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி சமுகமளிக்கவில்லை என்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் சந்திராணி சேனாரத்ன தெரிவித்தார். (இ-7)

# இராணுவத்துக்கு பாதிப்பு ஏற்பட ஜனாதிபதி இடமளிக்கமாட்டார்

## சு.க.அமைச்சர் சுசில் நம்பிக்கை



(கொழும்பு))

எமது இராணுவ அதிகாரி பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக வெளிவிவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சிறு புறக்கணிப்பை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு சில மணித்தியாலங்களில் தலையிட்டு தடுத்து நிறுத்தியதாக அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதியிடம் கேட்கவும் இல்லை, ஜனாதிபதியை அறிவுறுத்தவும் இல்லை. வெளிவிவகார அமைச்சு இராணுவ அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அறிவித்திருந்தது.

இராணுவத்தினரின்கௌரவத்தைப் பாதுகாப்பதாக தேர்தலின் போது உறுதியளித்துள்ள ஜனாதிபதி, இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு இராணுவத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு தனது வாக்குறுதியை காப்பாற்றியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பணி நீக்கம் செய்யப்பட்ட லண்டனிலுள்ள இலங்கை தூதரக பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை உடனடியாக மீண்டும்சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# எம்.பி, சமாதான நீதவான்,வேட்பாளர் அடையாள அட்டைகள் வாக்களிப்பதற்கு செல்லுபடியற்றவை

## மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு



(கொழும்பு)

புகைப்படத்துடனான அடையாளம் காணக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆள் அடையாள அட்டையின்றி எந்தவொரு நபருக்கும் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை என்று தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய மீண்டும் அறிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை, அங்கீகரிக்கப்பட்ட வாகன சாரதி அனுமதிப்பத்திரம், உறுதி செய்யப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு, அரச ஊழியர் அடையாள அட்டை , ஓய்வூதிய அடையாள அட்டை, மத குருமார்களுக்காக ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டை, தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படும் தற்கால அடையாள அட்டை ஆகியவற்றை மாத்திரமே வாக்களிப்பதற்கு பயன்படுத்த முடியும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் அடையாள அட்டை வாக்களிப்பதற்கு செல்லுபடியற்றதாகும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சமாதான நீதவான்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை உள்ளிட்ட எந்தவொரு அடையாள அட்டையும் வாக்களிப்புக்கு பயன்படுத்த முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1325

Search for people, places and things | Nagendram Home

### சனுசா


காதல் வலிதான் பெரியவலின்னு சொல்லிகிட்டு இருக்கிறவங்க



கதவுக்கு இடையில கையவிட்டுப் பாருங்க அப்போ தெரியும் எந்த வலி பெரிய வலின்னு

### கவிஸ்னா


அம்மா நாலு நாட்டுக்கோழி முட்டை வாங்கிட்டு வரச் சொன்னாங்க



எந்த எந்த நாடுன்னு கேட்டேன்... இங்க உட்கார வைச்சுட்டாங்க

### சானுகா

மனைவி Cool ஆ இருந்தா சாப்பாடு Hot ஆ கிடைக்கும்
மனைவி Hot ஆ இருந்தா சாப்பாடு Cool ஆ கிடைக்கும்



அம்புட்டுத்தானுங்க நம்ம வாழ்க்கை

### சபேஷ்


வேலை கிடைச்சா எல்லாம் சரியாயிடும்
கல்யாணம் ஆனா எல்லாம் சரியாயிடும்
குழந்தை பிறந்தா எல்லாம் சரியாயிடும்



இப்படிச் சொல்றவன முதல்ல தூக்கிப்போட்டு மிதிச்சா எல்லாம் சரியாயிடும்

### முரளி

ஏன்டா உங்க ஸ்கூல்ல ரன்னிங் ரேஸ் இருக்குன்னு சொன்னியே என்னாச்சு?



அதை ஏன் கேட்கிறீங்க அப்பா... எனக்குப் பயந்து எல்லாப் பசங்களும் எனக்கு முன்னாடியே ஓடிப் போய்ட்டாங்க

### சந்தோஷ்

ஆடாச் சாப்பிடுறவன் பேச்சுலர்



சூடு பண்ணிச் சாப்பிடுறவன் குடும்பஸ்தன்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போர்க்குற்றவாளியான பிரிகேடியர் பிரியங்கவை பிரிட்டனில் வைத்து கைது செய்ய வேண்டும்



## சட்டத்தரணிகள் குழு வலியுறுத்து

(லண்டன்)

புலம்பெயர் தமிழர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த இராணுவ அதிகாரியை பிரித்தானியாவில் வைத்தே கைது செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ள பிரித்தானிய சட்டத்தரணிகள் குழு போர்க்குற்றவாளியான இவருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறின் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக எச்சரித்துள்ளனர்.

இந்த விடயத்தை விசேட விதமாக கையாண்டுவரும் சட்டத்தரணிகளுள் ஒருவரான கீத் குலசேகரம் கருத்துத் தெரிவிக்கையில்,

புலம்பெயர் தமிழ் மக்கள் பிரித்தானியாவில் மேற்கொண்டிருந்த போராட்டத்தின் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட இலங்கை இராணுவ அதிகாரிக்கு எதிராக சட்ட ரீதியான முறையில் பல்வேறு கோணங்களில் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம்.

அந்தவகையில் முதலில் வெளிவிவகார அமைச்சுக்கு எச்சரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தோம். தனிப்பட்டவர்கள் அச்சுறுத்தலை எதிர்கொண்டவர்கள் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நீதவான் நீதிமன்றில் வழக்கு பதிவு செய்திருந்தோம். சுமார் 49 முறைப்பாடுகளை உள்ளடக்கி வழக்குப் பதிவு செய்துள்ளோம்.

முதற்கட்டமாக பிடியாணைக்கான வழக்கை நீதிமன்றில் போட்டிருந்தோம். இந்த வழக்கு உள்நாட்டு சட்டங்களை மீறியதன் அடிப்படையில் போடப்பட்டது.

யுத்தக்குற்றச்சாட்டு வழக்கு தாக்கல் செய்தால் நீதவான் நீதிமன்று தமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ளது என அதை புறக்கணிக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. அதனால் சட்ட நடவடிக்கைகளை 3 விதமாக பிரித்து மேற்கொண்டுள்ளோம். முதலாம் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதாவது ஒரு தனி நபருக்கு கொலை மிரட்டல் விடுவது என்ற அடிப்படையிலும், பொது இடத்தில் தவறான அச்சுறுத்தல் வழங்கும் வகையில் நடந்துகொண்ட சட்ட மீறல் செயற்பாட்டை மேற்கொண்டதன் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அடுத்ததாக குறித்த அதிகாரிக்கு எதிரான யுத்த குற்றத்துக்கான ஆதாரங்களை திரட்டி வருகிறோம். விரைவில் அந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

முன்னேற்பாடாக வெளிநாட்டு அமைச்சிடம் அவருக்கான இராஜதந்திர பாதுகாப்பை நீக்குமாறு கோரியுள்ளோம். பல பொது அமைப்புக்களின் கையெழுத்துடன் அந்த கோரிக்கையை முன்வைத்துள்ளோம். அது தவறும் பட்சத்தில் இந்த விடயத்தை உடனடியாக உயர்நீதிமன்றுக்கு கொண்டு செல்லவுள்ளோம்.

இவ் விடயத்தை பொது நல வழக்கு என்ற வகையில் கொண்டுசெல்ல முடியாது. யுத்தக்குற்ற வழக்கு என்ற ரீதியில் கொண்டுசெல்ல முடியும். இருப்பினும் தற்போது உள்நாட்டு சட்டத்தையே மீறியுள்ளார் என்ற வகையில் முதற்கட்டமாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.

அதாவது இராணுவ சீருடையுடன் வெளியே வந்து நின்றுள்ளார். மக்களை மிரட்டும் விதமாக நடந்துள்ளார். தனிநபர்களை தொலைபேசியில் ஒளிப்பதிவு செய்துள்ளார் எனப் பல குற்றங்களில் ஈடுபட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவதாக யுத்த குற்றச்சாட்டு வழக்கு உயர் நீதிமன்றில் தொடரப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தங்க பிஸ்கட்டுடன் பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

தங்க பிஸ்கட்களை சட்ட விரோதமாக இந்தியாவிற்கு கொண்டு செல்ல முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்றுக் காலை கடடுநாயக்க விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பெண் கண்டி பெரதேனியா பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கப் பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## 267 கிலோ கழிவுத் தேயிலை மீட்பு




(கொழும்பு)

வெலிமடை - பூஹூல் பொல பிரதேசத்தில் கப் வண்டியில் ஏற்றிச் செல்லப்பட்ட 267 கிலோ கிராம் கழிவுத் தேயிலை தொகையை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய நேற்று முன்தினம் இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ள நிலையில், இதன்போது 18 வயதான இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# குற்றவாளிகளை கைதுசெய்ய ஜனாதிபதியே தடை!

## விக்கிரமபாகு குற்றச்சாட்டு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கவும், கடந்த ஆட்சிக்காலத்தில் நடந்த குற்றங்களுடன் தொடர்புடைய முக்கியஸ்தர்களை கைது செய்யவும் ஜனாதிபதி தடைகளை ஏற்படுத்தி வருவதாக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கைக்கு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை கொண்டு வரும் அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதனை முன்னெடுத்துச் செல்வதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தவிர்த்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நடந்த குற்றங்கள் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டும் என்று தேசிய நிறைவேற்று அதிகார சபையில் அங்கம் வகித்த சமயத்தில் கூறினோம்.

எனினும் ஜனாதிபதியே அதற்கு தடையை ஏற்படுத்தினார். கடந்த 2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் மோசடிகள் மூலம் பெற்றுக்கொண்ட பணத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லவே பயன்படுத்தினார்.

தற்போதைய ஜனாதிபதியும் அப்படியான அழிவுப் பாதையில் பயணிக்கும் நபரே. இதன் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதியின் ஊழல், மோசடிகளை மறைத்து வருகிறார்.

அதேவேளை யுத்தத்தை பாக்கியமாக அவர்கள் கூறுகின்றனர். போரினால் யாருக்கு நன்மை ஏற்பட்டது? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், போரில் ஒரு இலட்சத்து 50 தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டதுடன், வடக்கில் நாகரிகம் அழிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

## மட்டக்களப்பில் வாக்குப் பெட்டிகள் விநியோகம்





(ஏறாவூர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இன்று நடைபெறும் நிலையில் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லும் பணிகள் நேற்றுக் காலை முதல் ஆரம்பமாகியுள்ளன.

அந்த வகையில், மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரதான தேர்தல் நிலையமாகச் செயற்படும் மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் இருந்து வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்லும் பணிகள் நடந்தன.

இன்று இடம்பெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வாக்களிக்க 389,582 பேர் தகுதி பெற்றுள்ளதுடன், இந்த வாக்காளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் 457 வாக்குச் சாவடிகளில் வாக்களிக்கவுள்ளனர்.

அத்துடன், தேர்தல் கடமைகளுக்காக மாவட்டத்திற்குள் இருந்தும், வெளியில் இருந்தும் 4437 உத்தியோகத்தர்கள் நேற்றுக் காலை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். (இ-7)

# இரகசியமாக பிரசாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான கால எல்லை கடந்த புதன்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளது. எனினும் இரகசியமான முறையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக சுயாதீன தேர்தல்கள்ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.


எனவே அவ்வாறு இரகசியமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவ்வாணைக் குழு தெரிவித்துள்ளது.

இன்று சனிக்கிழமை நடை பெறவுள்ள உள்ளுராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. வாக்காளர்கள் அனைவருக்கும் வாக்காளர் அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் தேர்தலை உரிய முறையில் முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை வாக்குப் பெட்டிகள் நேற்று வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. எனவே வாக்குப் பெட்டிகள், ஆவணங்களை விநியோகித்தல் மற்றும் பொறுப்பேற்றல் போன்ற பணிகளுக்காக பத்தொன்பது பாடசாலைகளும் இரண்டு கல்வியியல் கல்லூரிகளும் தயார்செய்யப்பட்டுள்ளன.

சமய அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதனூடாக சிலர் அபேட்சகர்களை ஊக்குவிப்பதற்கான பிரசாரங்களையும் முன்னெடுக்கலாம். அவ்வாறு மேற்கொள்வதும் தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும். எனவே அவ்வாறு எவராவது தேர்தல் சட்டத்தை மீறுவார்களாயின் அது குறித்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கும் அறிவிக்குமாறும் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. (இ-7)

# சாதனை படைத்த தமிழ் விஞ்ஞானிக்கு விமான நிலையத்தில் அமோக வரவேற்பு








தாய்லாந்தில் நடைபெற்ற அறிவியல் புலமை தொழில்நுட்ப கண்காட்சியில் இலங்கைத் தமிழ் மாணவன் சோமசுந்தரம் வினோஜ்குமார் மேலும் இரு பதக்கங்களைப் பெற்று நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

நாடு திரும்பிய சோமசுந்தரம் வினோஜ்குமாருக்கு விமான நிலையத்தில்சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

2018 இற்கான அறிவியல் புலமை தொழில்நுட்ப கண்காட்சி, தாய்லாந்து மாநாட்டு மண்டபத்தில் 2018.01.01 தொடக்கம் 2018.02.06 வரை நடைபெற்றது. சர்வதேச அறிவியல் புலமை மற்றும் கண்டுபிடிப்பு போட்டியில் 97 நாடுகளைச் சேர்ந்த 1800 பல்கலைக்கழக கண்டுபிடிப்பாளர்கள் போட்டியிட்டனர்.

அப்போட்டியில் இலங்கை சம்மாந்துறையைச் சேர்ந்த இளம் தமிழ் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமார் போட்டியிட்டு சர்வதேச வெண்கல விருதையும் உலக கண்டுபிடிப்பாளர் மற்றும் முயற்சியாளர் ஸ்தாபனத்தினால் சர்வதேச ஆக்கபூர்வமான கண்டுபிடிப்புக்கான சிறப்பு விருதையும் பெற்றுக் கொண்டார்.

97 நாடுகளை சேர்ந்த 1800 விஞ்ஞானிகள் போட்டியிட்டனர். இப்போட்டியில் 4 மலேசிய தமிழர்களுடன் சேர்த்து ஒரு ஈழத் தமிழனாக போட்டி இட்டு வெற்றியடைந்துள்ளார்.

இவ் விருது "கணித உதவியாளன்" எனும் கணித பாடத்தை இலகுவாக கற்க உதவும் கண்டுபிடிப்புக்கே வழங்கப்பட்டது.

தனது ஆரம்பக்கல்வியை சம்மாந்துறை ஸ்ரீகோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்திலும் உயர்தரத்தினை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கும் இவர் இதுவரை 81 கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளதோடு 31 தேசிய விருதுகளையும் 3 சர்வதேச விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

எமது "அன்பே சிவம்" அறப்பணி அமைப்பின் தொண்டரும் ஆவார்.

இதன்போது கருத்து தெரிவித்த வினோஜ்குமார்,

"எனது இரண்டு கண்களான சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும், சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்துக்கும் மேலும் எனது யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் எங்கள் அறப்பணி அன்பே சிவத்திற்கும், மற்றும் இன,மத பேதமின்றி நாடு கடந்து வாழ்த்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது பணிவன்பான நன்றிகள்.

என்னுடைய கண்டுபிடிப்பு என்னைப் பொறுத்தவரை தரம் என்பதற்கு அல்ல. உங்கள் அனைவரது ஆசிர்வாதம் மற்றும் ஊக்கப்படுத்தலே மிக முக்கியமாக இருந்தது.

எல்லா இடத்திலும் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அந்த ஒருசில நல்லவர்களின் நட்புக்கு கிடைத்த பரிசு தான் இந்த விருது. ஏதோ சந்தர்ப்ப சூழ்நிலையால் இவ் விருது கிடைத்தது.

புதியவற்றினை ஏற்படுத்தாத தேசம் எழுச்சி பெறாது. எனவே எமது நாட்டில்என்னை விட பல திறமை வாய்ந்த எத்தனையோ பல கண்டு பிடிப்பாளர்கள் இருக்கின்றார்கள்.

இன, மத பேதமின்றி அனைவரும் திறமைக்கு மதிப்பு வழங்கினால் மாத்திரமே எமது நாட்டில் புரிந்துணர்வுடன் கூடிய சமாதானமும் அபிவிருத்தியும் அடையும்.

இதனை அரசியலினாலோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையினாலோ ஏற்படுத்த முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முன்னாள் போராளி உயிரிழப்பு



(விசுவமடு)

முன்னாள் போராளியொருவர் உடல் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். விசுவமடு புன்னை நீராவி, குமாரசாமிபுரத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வீரப்பன் என்று அழைக்கப்படும் சந்திரச்செல்வன் (வயது 37) என்பவரே நேற்று முன்தினம் உயிரிழந்தவராவார்.

தாயக விடுதலை போராட்டத்தின் போது தனது இரண்டு கால்களை இழந்ததுடன் தனது கைகளிலும் கடும் காயத்திற்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-9)

## தேர்தல் கடமைக்கு பொலிஸாரை

# ஏற்றிச்சென்ற வாகனம் மோதி ஒருவர் காயம்

(குருமன்காடு)

தேர்தல் கடமைக்காக பொலிஸாரை ஏற்றிச்சென்ற வாகனம் மோதி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஓமந்தை பகுதியில் நேற்று இடம்பெற்ற இவ்விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்று வங்கி ஒன்றில் பணிபுரியும் இளைஞர் ஒருவரின் மோட்டார் சைக்கிளில் மோதியே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. ஓமந்தை பொலிஸார் இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை மேற் கொண்டுவருகின்றனர்(2-250)

# போலிக்கடிதம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவில் மங்கள சமரவீர முறைப்பாடு



(கொழும்பு)

தனது கையொப்பத்துடன் போலிக் கடிதமொன்று தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளார்.

இது குறித்த தகவலை மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

"வெளிவிவகார அமைச்சின் கடிதத் தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த போலிக் கடிதத்தில் என்னுடைய கையொப்பத்தைச் சேர்த்துள்ளார்கள் [illegible] குப்பலானது. தனது மூடத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது. நான் தற்போது வெளிவிவகார அமைச்சர் இல்லை என்பதை அவர்கள் இதுவரையும் அறியாதுள்ளனர்.

இந்தக் கடிதத்தை எழுதிய சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்காக குற்ற விசாரணைப் பிரிவில் முறையிட்டுள்ளேன்" என மங்கள சமரவீர தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

பிரித்தானிய தமிழர் பேரவைக்கு என் முகவரியிடப்பட்டுள்ள இந்த கடிதமானது லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பெர்னாண்டோ நடந்துகொண்ட விதம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் நடவடிக்கை தொடர்பான விடயத்தை உள்ளடக்கியுள்ளது.

லண்டனில் பெப்ரவரி 4ம் திகதி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றபோதும் பெப்ரவரி 2ஆம் திகதி கடிதத்தை எழுதியதாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மங்கள சமரவீரவை வெளிவிவகார அமைச்சர் எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் மங்கள சமரவீர தற்போது வெளிவிவகார அமைச்சர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் வன்முறையில் ஈடுபட்டால் துப்பாக்கிச்சூடு

## பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை



(கொழும்பு)

வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் அல்லது வாக்களிப்பு நிலையங்களில் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட முயற்சித்தல் மற்றும் வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)




# பூங்காவில் ஒரு பாடம்



(நேற்றைய தொடர்ச்சி)

அதற்குள் குப்பையைப் போட்டார் அம்மா. சிறுவனும் குப்பையைப் போட்டு விட்டுக் கை கழுவினான். அம்மாவும் கை கழுவிய பிறகு இருவரும் சீமெந்து பெஞ்சுக்குத் திரும்பினார்கள்.

மீண்டும் அப்பாவை அதேபோல் குப்பைத் தொட்டிக்கு அழைத்துச் சென்று குப்பையை அதில் போட்டுக் கை கழுவ வைத்து அழைத்து வந்தான் அந்தச் சிறுவன்.

இதையெல்லாம் ஆச்சரியமாய் கவனித்துக் கொண்டிருந்த அப்பா, ஜனனியைத் திரும்பிப் பார்த்தார். அவளும் அதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"பார்த்தாயா ஜனனி! அவங்க பார்வை இழந்தவங்களாக இருந்தாலும் இந்தப் பூங்கா, குப்பைகளால் அசுத்தமாகிவிடக் கூடாதுன்னு நினைக்குறாங்க. தன்னால பார்க்க முடியாத பூங்கா எப்படி இருந்தா நமக்கென்னன்னு அலட்சியமா இருக்காம, சுத்தமா வச்சுக்க முயற்சி பண்றாங்க. அவங்களே அப்படி நினைக்கும்போது, கண் பார்வையுள்ள நாம அதைவிட ஒரு படி மேலே முயற்சி செய்யணும் இல்லையா?"

எப்போதும் மறுப்புக் கூறும் ஜனனி, இப்போது மிக அமைதியாக உட்கார்ந்திருந்தாள்.

"இன்னொண்ணு கவனிச்சியா? அவரவர் வேலையை அவரவர்களே செஞ்சாங்க. தங்களுக்குக் கண் தெரியாதுங்கிறதால அந்தப் பையன் கிட்ட கொடுத்துக் குப்பையைப் போடச் சொல்லல!"

ஜனனியின் மனத்துக்குள் அந்தக் காட்சி ஏதோ ஒன்றை உணர்த்தியது. அவளுக்குள் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

வேகமாக எழுந்த ஜனனி, தான் வீசி எறிந்த குப்பைகளைத் தேடி எடுத்தாள். அவற்றோடு மற்றவர்களால் வீசி எறியப்பட்டுப் பாதையில் கிடந்த குப்பைகளையும் எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டாள்.

"வெரி குட்!" என்று கை தட்டினார் அப்பா.

இப்போதெல்லாம் வீட்டிலும் குப்பை வாளியில்தான் குப்பையைப் போடுகிறாள் ஜனனி! அதுமட்டுமல்ல, தன் வேலைகளைத் தானே செய்துகொள்கிறாள்!

(முற்றும்)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

02.2018
10

❖1355- இங்கிலாந்து, ஒக்ஸ்போர்டில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலவரத்தில் 63 மாணவர்களும், 30 பொது மக்களும் கொல்லப்பட்டனர்.

❖1763- பிரான்ஸ் கியூபெக் மாநிலத்தை ஐக்கிய இராச்சியத்திற்கு அளித்தது.

❖1798- லூயி அலெக்சாண்டர் பேர்த்தியர் ரோமைக் கைப்பற்றி அதனை பெப்ரவரி 15 இல் ரோமன் குடியரசாக அறிவித்தான்.

❖1815 - கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றும் நோக்கில் பிரித்தானியர் கண்டியினுள் நுழைந்தனர்.

❖1846- பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பஞ்சாபின் சீக்கியருக்கும் இடையில் இடம்பெற்ற போரில் பிரித்தானியர் வெற்றி பெற்றனர்.

❖1863- அலன்சன் கிரென் தீயணைக்கும் கருவியின் காப்புரிமம் பெற்றார்.

❖1870- கிறிஸ்தவப் பெண்கள் இளையோர் அமைப்பு (YWCA) அமைக்கப்பட்டது (நியூயோர்க்நகரம்).

❖1897 - மடகஸ்காரில் மதச் சுதந்திரம் அறிவிக்கப்பட்டது.

❖1914- யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக சார்ள்ஸ் கப்பர்லாண்ட் நியமிக்கப்பட்டார்.

❖1964- அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் கரையில் HMAS மெல்பேர்ன் என்ற விமானந்தாங்கிக் கப்பலும் HMAS வொயேஜர் என்ற காடற்படைக் கப்பலும் மோதிக் கொண்டதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.

❖1969- தமிழ் நாட்டின் முதலமைச்சராக மு. கருணாநிதி தெரிவு செய்யப்பட்டார்.

❖1991 - வன்னி மீதான இலங்கை இராணுவத்தினரின் வன்னி விக்கிரம படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டதுடன் உலங்கு வானூர்தி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது.

❖1996 - சதுரங்கக் கணனி "டீப் புளூ" உலக முதற்தரவீரர் காரிகாஸ்பரோவை வென்றது.

❖2009 - தகவல்தொடர்பு செயற்கைக்கோள்கள் இரிடியம் 33, காசுமசு-2251 ஆகியன விண்வெளியில் மோதி அழிந்தன.

**பிறப்புகள்**

❖1775- சார்லஸ் லாம், ஆங்கிலேய எழுத்தாளர், கவிஞர் (இ. 1834)

❖1805- குரியாக்கோஸ் எலியாஸ் சாவறா, கேரள கத்தோலிக்கப் புனிதர் (இ. 1871)

❖1824- சாமுவேல் பிளிம்சால், ஆங்கிலேய வணிகர், அரசியல்வாதி (இ. 1898)

❖1848- அன்னா பொச், பெல்சிய ஓவியர் (இ. 1936)

❖1890- போரிஸ் பாஸ்ரர்நாக், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (இ. 1960)

❖1898 - பெர்தோல்ட் பிரெக்ட், செருமானிய இயக்குநர், கவிஞர் (இ. 1956)

❖1916- தர்பாரா சிங், பஞ்சாபின் முதலமைச்சர் (இ. 1990)

❖1919- சு. ராஜம், தமிழக ஓவியர், திரைப்பட நடிகர், கர்நாடக இசைக்கலைஞர் (இ. 2010)

❖1982- ஜஸ்டின் காட்லின், அமெரிக்க விரைவு ஓட்ட வீரர்

❖1984- அல்போன்சு புத்திரன், இந்தியத் திரைப்பட இயக்குநர், நடிகர், திரைப்படத்தொகுப்பாளர், திரைக்கதை ஆசிரியர்

❖1985- மஹதி, தமிழகக் கர்நாடக இசைப் பாடகி

**இறப்புகள்**

❖1891- சோஃபியா கோவலெவ்சுகாயா, சுருசிய-சுவீடன் கணிதவியலாளர், இயற்பியலாளர் (பி. 1850)

❖1912- ஜோசப் லிஸ்டர், ஆங்கிலேய மருத்துவர் (பி. 1827)

❖2001 - கே. தவமணி தேவி, இலங்கை-இந்தியத் திரைப்பட நடிகை

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 50 | 50 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 70 | 100 | 60 |
| தக்காளி | 30 | 40 | 60 | 60 | 35 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 40 | 35 |
| கோவா | 80 | 50 | 80 | 60 | 50 |
| கரட் | 80 | 50 | 90 | 120 | 70 |
| பூசணி | 60 | 30 | 30 | 50 | 40 |
| புடோல் | 80 | 50 | 70 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 70 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 160 | 170 | 180 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 80 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 100 | 130 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 40 | 80 | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 150 | 210 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 60 | 40 | 60 | 60 | 50 |
| கறிமிளகாய் | 160 | 100 | 150 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 450 | 200 | 600 | 800 | 500 |
| போஞ்சி | 50 | 100 | 100 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | - | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 10 | 40 | 40 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 180 | 200 | 140 | 20 | 150 |
| வெங்காயப்பூ | 60 | 50 | 90 | 120 | 80 |
| முள்ளங்கி | 20 | 50 | 60 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 150 |
| ஈரப்பலா | 80 | 40 | — | 80 | 80 |

ஒருவன் தனது வாழ்க்கைக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுப்பது கடமையாகாது. அதனைத் திறம்படச் செய்வதே கடமையாகும். - பாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அன்பார்ந்த மக்களே! வாக்களிக்கச் செல்லுங்கள்

அன்பார்ந்த மக்களே! இன்று உள்ளூராட்சி சபைக்கான தேர்தல். தேர்தலுக்கான அத்தனை ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் செய்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றிய விளக்கத்தை தேர்தல் ஆணைக்குழு பொதுமக்களுக்கு அறியப்படுத்தியுள்ளது.

எனவே வாக்களிக்கும் முறை பற்றியும் மக்கள் தெளிவாக அறிந்திருப்பர்.

வாக்களிப்பதென்பது ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமை. ஆகையால் வாக்களிக்க வேண்டும் அது எனது கடமை என்று வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள ஒவ்வொரு குடிமகனும் நினைத்து அந்தப் பணியைச் செய்தாக வேண்டும்.

அதிலும் நேரகாலத்தோடு சென்று வாக்களிப்பது பொருத்தமான செயற்பாடாக இருக்கும்.

வாக்களிக்கத் தகைமை பெற்ற அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமது வாக்குகளை அளிப்பதன் மூலம் தமது அக்கறையையும் கருசனையையும் உறுதிப்படுத்த முடியும்.

இவை வாக்காளர் சார்ந்த விடயமாக இருக்க, தேர்தல் கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களும் தமது பணியை நேர்மையாகச் செய்வர் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

அதிலும் இம்முறை வாக்குகளை எண்ணும் பணி அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறுமென தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உண்மையில் இது ஒரு பொருத்தமான - நம்பகத்தன்மை நிறைந்த செயற்பாடாகக் கருதப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய அவர்கள் நீதியான தேர்தலை நடத்துவதில் மிகவும் உறுதியாக இருப்பதுடன் அதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் நிறைவேற்றியுள்ளார்.

அந்தவகையில் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படுவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதேநேரம் வாக்குகளை எண்ணுகின்ற இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் பிரதிநிதிகள் நோக்குநர்களாக இருக்க முடியும்.

எனவே இவ்வாறு வாக்கெடுப்பின்போதும் வாக்குகளை எண்ணுகின்ற பணியின்போதும் நோக்குநர் பணியைச் செய்பவர்கள் மிகவும் நிதானமாக, உன்னிப்பாக தமது கவனத்தைச் செலுத்துவது அவசியமானதாகும்.

இவ்வாறு அனைத்து தரப்பினரும் நேர்மை, நீதி என்ற கண்ணியத்தோடு தமது பணியைச் செய்து நிறைவேற்றும்போது, எல்லாம் நல்லதாக நடந்தது என்ற செய்தி எல்லோரையும் மகிழ்விக்கும்.

## இலங்கையின் நல்லிணக்கத்துக்கு அமெரிக்கா பாராட்டு

(கொழும்பு)

நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களில் இலங்கையின் செயற்பாடு பாராட்டுக்குரியது என உயர்மட்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சமாதான நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய, அமெரிக்க அரச துறை அரசியல் விவகாரங்களுக்கான செயலாளரான தோமஸ் ஏ. ஷனோன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்க செயற்பாடுகளில் இலங்கையின் முன்னேற்றகரமான செயற்பாடு, இலங்கை - அமெரிக்க இரு தரப்பு உறவை மேலும் பலப்படுத்துவதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் ஒரு நண்பராகவும், பங்காளராகவும் செயற்படுவதை எண்ணி தாம் பெருமிதம் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

போரிற்கு பின்னராக நாட்டில் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதற்கான இலங்கை தலைமைகளின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப அனைத்து மக்களும் சமாதானமாக செழிப்புடன் வாழ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். (ம)

## இலங்கையில் அதிகரிக்கவுள்ள கொரிய முதலீடுகள்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விஜயம், கொரிய முதலீட்டாளர்களின் கவனத்தை இலங்கை பக்கம் திருப்பியுள்ளது என இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் ஹீயோன் லீ தெரிவித்தார்.

இலங்கைக்கான கொரிய தூதரகத்தில் இடம் பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் - கொரியாவிற்கும் இடையிலான 40 ஆண்டுகால இராஜதந்திர உறவுகள் மேலும் வலுவாக பல்துறைகளை உள்வாங்கும் வகையில் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், இருநாட்டு ஒத்துழைப்புகளை மேலும் விரிவுபடுத்துவதே தனது நோக்கம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட கொரியாவிற்கான விஜயத்தின் மூலம் இருநாட்டு தலைவர்களுக்கு மிடையிலான புரிந்துணர்வு வலுவடைந்துள்ளது எனவும் தெரிவித்தார். (ம)

## இராணுவத் தலைமை அதிகாரி ஜெனரல் அமல் கருணாசேகர நாட்டைவிட்டு வெளியேறத் தடை

இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வெளிநாடு செல்வதற்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கையை அடுத்தே, கொழும்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

லசந்த விக்கிரமதுங்க கொலை நடந்த காலகட்டத்தில், மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தேர்தல் விதி மீறிய 7 பேர் பொலிஸாரால் கைது

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ள காலத்தில் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்களில் 07 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை 06.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையான காலப்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் முறைப்பாடுகள் 09 மற்றும் தேர்தல் சட்டத்தை மீறிய 05 சம்பவங்கள் இந்தக் காலத்தில் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## பிரம்மாவின் பகலும் பிரம்மாவின் இரவும்- 01

எல்லாம்வல்ல பரமாத்மாவின் படைத்தற்கருவியாகிய பிரம்ம தேவருடைய உண்மையான உணரும் தன்மை குறைந்து அவரது அகக்கண் மூடியது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வு பிரம்மாவின் பகல் கழிந்து பிரம்மாவின் இரவு தோன்றியதாகக் கருதப்படுகிறது. பிரம்மதேவர் அறியாமை என்னும் உறக்கத்தில் ஆழ்ந்தார்.

அவரைத் தொடர்ந்து சகல மனித ஆன்மாக்களும் அகக்கண் மூடித் தூங்க ஆரம்பித்தனர். அவர்களது புறக்கண்கள் நன்கு விழித்திருந்த போதிலும் பூவுலகமெங்கும் அக இருள் பரவியது. இயற்கையின் சமநிலை குலைந்தது. பஞ்ச பூதங்கள் மனிதக் கட்டுப்பாட்டிலிருந்து விலக ஆரம்பித்தன. பூமியெங்கும் பூகம்பம், எரிமலை, கட்டுக்கடங்காத மழை வீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு, கடற்கொள்ளல், சூறாவளி என்பன ஏற்பட ஆரம்பித்தன. தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், சடப்பொருட்கள் அனைத்தும் மெல்ல மெல்ல அழிவை நோக்கிச் செல்லத் தொடங்கின. படிப்படியாக பூலோகம் முழுவதுதே உயிரோட்டமான வாழ்க்கையற்றுப் போய்க் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் ஊழிக்காலம் நெருங்கியது. ஒட்டுமொத்த விநாசம் என்னும் பெரும் பிரளயம் இடம்பெறத் தயாராகக் கொண்டிருந்த கணத்தில்... என்ன நடந்தது என்ற மீதிக் கதையை நாளைய கட்டுரையில் காணலாம்.

தொடர்புகளுக்கு: 077 923 4562

பிரம்மகுமாரிகள

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### கண்ணேறு, நாவேறு என்று சொல்வதில் ஏதாவது அர்த்தம் உள்ளதா?

சிலர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். அவன் கண்ணுபட்டாலே போதும். ஒண்ணுமில்லாமல் போய்விடும். அவன் நாக்கு பட்டால் போதும் எல்லாமே முடிந்து விடும். இவ்வாறு பலரும் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அவன் நாக்கு கருநாக்கு என்று சிலர் கூறுவதுண்டு. ஓரளவிற்கு அது சரியாகவும் இருக்கும். முற்றிலும் தவறானது என்று சொல்வதற்கும் வாய்ப்பில்லை.

சிலரது கண்பார்வை பட்டால் அந்தப் பொருள் கெட்டுப் போகும். உதாரணமாக ஒரு வீட்டுத் தோட்டத்தில் பல வகைக் கீரைகள் செழித்து வளர்ந்து இருப்பதாக வைத்துக் கொள்வோம்.


கண்ணேறு உள்ள ஒருவர் அங்கு வந்து ஆஹா நல்ல நல்ல கீரையெல்லாம் வளர்ந்துள்ளதே. எனக்கும் கொஞ்சம் தாருங்கள் என்று கூறிவிட்டுச் செல்வார்.

அடுத்தநாள் பார்த்தால் அந்தக் கீரைச் செடியெல்லாம் வாடி எறும்பு பொய்த்துக் கொண்டிருக்கும். அதிலிருந்து ஒரு கீரைகூட பறிக்க முடியாது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை **கிளிநொச்சி** பிரதேசத்தில சிலாவத்தை, உடுப்பிக்குளம், அளம்பில், குமுழமுனை, செமமலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால் இறைவனின் படைப்பான அனைத்து உயிர்களுக்கும் பணி செய்வது மிக நல்லது.
- ❖ மனித வடிவம் கொண்ட அனைத்து உயிரையும் வழிபடுங்கள், இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழியாகும்.
- ❖ விருப்பத்திற்கும், கோபத்திற்கும் அடிமையானால், உண்மையான சுதந்திரத்தின் இன்பத்தை உணர முடியாது என்பதால், அவற்றை தவிர்ப்பது நல்லது.
- ❖ கடவுளின் குழந்தைகளாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய். மனிதர்களுக்கு தொண்டு செய்வதன் மூலம் கடவுளுக்கு தொண்டு செய்தவனாகிறாய்.
- ❖ கடவுள் மீது நம்பிக்கை வைத்து துன்பப்படுபவர்களுக்கு இரக்கம் காட்டினால் உங்களுக்குத் தேவைப்படும் உதவி நிச்சயம் வந்தே தீரும்.
- ❖ நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள், நீ அறியாமலேயே **உனக்கு வழிகாட்டும்** தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

# முடிவுக்கு வருகிறதா மலிங்கவின் வேகம்?



இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதற்கு சாத்தியம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

லசித் மலிங்க அளித்த பேட்டி ஒன்றில், 'மன ரீதியாக கிரிக்கெட் விளையாடுவதை நிறைவு செய்துவிட்டேன். இனிமேலும் சர்வதேச போட்டிகளில் விளையாடுவேன் என நான் கருதவில்லை.

விரைவில் எனது ஓய்வு முடிவை நான் அறிவிக்க திட்டமிட்டுள்ளேன், இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையுடன் நான் இன்னும் பேசவில்லை.

நான் இலங்கை திரும்பியதும், எனது உடல் எவ்வாறு ஒத்துழைப்பு தருகிறது என்பதை தெரிந்து கொள்ள, உள்ளூர் போட்டிகளில் மீண்டும் கலந்து கொள்வேன். ஆனால் தற்போது நான் இனி ஐ.பி.எல் போட்டியில் விளையாடுவதும் முடிவுக்கு வந்துவிட்டது. மும்பை இந்தியன்ஸ் அணியுடன் புதிய அத்தியாயத்தை நான் துவங்க உள்ளேன்.

நான் இனிமேல் கிரிக்கெட் விளையாடாமல் கூட போகலாம் என தெரிவித்துள்ளார். மலிங்க, மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# வரலாறு படைக்குமா இந்தியா காத்திருக்கும் விராட் அணி




இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்கா மண்ணில் இதுவரை ஒருநாள் போட்டி தொடரை வென்றது கிடையாது. தென்னாபிரிக்க மண்ணில் 4 முறை ஒருநாள் போட்டி தொடரில் பங்கேற்று உள்ளது. இதில் 4 முறையும் தொடரை இழந்தே இருக்கிறது.

1992ஆம் ஆண்டு அசாருதீன் தலைமையிலான இந்திய அணி 5-2 என்ற கணக்கிலும், 2006ஆம் ஆண்டு ராகுல் டிராவிட் தலைமையிலான அணி 5 போட்டி கொண்ட தொடரை 4-0 என்ற கணக்கிலும் இழந்தது. டோனி தலைமையில் 2010ஆம் ஆண்டு 3-2 (5 போட்டி), 2013ஆம் ஆண்டு 2-0 (3 போட்டி) என்ற கணக்கிலும் தொடரை இழந்தது.

தற்போது தென்னாபிரிக்கா மண்ணில் முதல் முறையாக ஒருநாள் போட்டி தொடரை வென்று இந்தியா வரலாறு படைக்குமா? என்று ஆவலுடன் ரசிகர்கள் எதிர்பார்த்து இருக்கிறார்கள். விராட் ஹோலி தலைமையிலான இந்திய அணி இன்று 4ஆவது போட்டியில் வென்று தொடரை வெல்லும் ஆர்வத்தில் இருக்கிறது.

இன்றைய போட்டியில் வெற்றி பெறும் பட்சத்தில் தென்னாபிரிக்காவில் ஒருநாள் போட்டித் தொடரை வென்ற முதல் இந்திய தலைவர் பெருமையை ஹோலி பெறுவார். மேலும் ஒருநாள் போட்டி தர வரிசையில் தென்னாபிரிக்காவை பின்னுக்கு தள்ளிவிட்டு இந்தியா முதல் இடத்தை பிடிக்கும். (க)

# எனது ஆக்ரோஷம் தொடரும் விராட் ஹோலி விடாப்பிடி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றி பெற்ற இந்தியா ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்தது.

இப்போட்டியில் ஹோலி சதமடித்து அசத்தினார். ஆட்ட நாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

இதன்பின் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஒரு வீரர் கடைசி வரை நின்று ஆட வேண்டும். அப்போதுதான் ஓட்டங்களை குவிக்க முடியும்.

ஒரு தலைவராக கடைசி வரை நின்று துடுப்பெடுத்தாடியது அற்புதமாக இருந்தது. ஒருநாள் போட்டித் தொடரை இழந்துவிடக் கூடாது என்பதில் தீவிரமாக இருக்கிறோம்.

நான், இந்த வருடம் 30 வயதை தொடப்போகிறேன். பிட்னஸ் சரியாக இருந்தால்தான் விளையாட்டை வயதானாலும் தொடர முடியும்.

இதே போன்ற கிரிக்கெட்டை எனது 34-35 வயதில் கூட விளையாட வேண்டும் என நினைக்கிறேன். அதற்காகக் கடும் பயிற்சி பெறுகிறேன்.

ஏனென்றால் நான் ஆக்ரோஷமான ஆட்டத்தை ஆட விரும்புபவன். அந்த தீவிரம் போய்விட்டால் நான் என்ன செய்ய முடியும் என்று எனக்கு தெரியவில்லை.

அதனால் அந்த தீவிரத்தைப் பாதுகாக்கப் போராடுகிறேன். அதற்காக எவ்வளவு முடியுமோ, அவ்வளவு பயிற்சி செய்கிறேன். அணியின் ஒட்டுமொத்த செயற்பாடும் முக்கியம் என தெரிவித்துள்ளார். (க)

# ஹர்பஜனுக்கு உதவிய தமிழகத்து இளைஞன்

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கிற்கு தமிழகத்தை சேர்ந்த ரசிகர் ஆதரவாக இருந்திருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங், ஒரு கட்டத்தில் இந்திய அணியில் இருந்து நீக்க முடியாத வீரராக இருந்தார்.

அஸ்வின் வந்த பின்பு, அவரின் இடம் கேள்விக்குறியானது.



இதுபோன்று ஹர்பஜன் சிங் வாழ்க்கையின் இக்கட்டான காலகட்டங்களில், தமிழகத்தின் திண்டுக்கலைச் சேர்ந்த சரவணன் என்பவர் அவருக்கு ஆதரவாக டுவிட் போட்டு வந்துள்ளார்.

திண்டுக்கலைச் சேர்ந்த சரவணன் அபுதாபியில் பொறியாளராக பணியாற்றி வருகிறார். சரவணன் டுவிட்டர்களை பார்த்து நெகிழ்ந்து போன, ஹர்பஜன் அவரைப் பார்க்க முடிவு செய்துள்ளார்.

இதனால் இருவருக்கும் இடையிலான நட்பு வளர்ந்தது. ஒரு கட்டத்தில் ஹர்பஜனுக்கு பொங்கல் வாழ்த்து தெரிவித்து சரவணன் செய்தியை ஹர்பஜன் சிங் பெருமையாக தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து சரவணன் கூறுகையில், ஹர்பஜன் சிங் சரியாக விளையாடாதபோது, அவர் குறித்த விமர்சனங்கள் டுவிட்டரில் வரும் போது அவர்களுக்கு மிகவும் நாகரிகமான முறையில் பதில் அளித்து வந்தேன்.

ஐ.பி.எல் தொடரில் மும்பை அணிக்காக தொடர்ந்து விளையாடி வந்த ஹர்பஜன், இந்த ஆண்டு டோனி தலைமையிலான சென்னை அணிக்கு விளையாடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# கூக்ளி பந்துகளுக்கு திணறுவது உண்மையே

## டுமினி ஒப்பின்




இங்குள்ள ஆடுகளத் தன்மை மற்றும் சீதோஷ்ண நிலையை எங்களை விட இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் நன்றாக பயன்படுத்துகிறார்கள். எவ்வளவு வேகத்தில், எந்த அளவில் பந்து வீசினால் நன்றாக இருக்கும் என்பதை கணித்து அதற்கு ஏற்ப பவுலிங் செய்கிறார்கள். ஒன்று, இரண்டு ஓட்டங்கள் எடுப்பதையும் கட்டுப்படுத்துகிறார்கள். எங்களது சுழற்பந்து வீச்சாளர்களுடன் ஒப்பிடும் போது அவர்கள் மெதுவாக வீசுகிறார்கள்.

அவர்கள் வீசும் 'கூக்ளி' வகை பந்து வீச்சில் ஓட்டம் எடுக்க முடியாமல் தடுமாறுகிறோம். 'கூக்ளி' பந்தை சமாளிக்க முடியாவிட்டால் களத்தில் சௌகரியமாக துடுப்பாட்டம் செய்ய முடியாது. அதேசமயம் இத்தகைய பந்து வீச்சை திறம்பட எதிர்கொண்டு விட்டால் அதன் பிறகு நம்பிக்கை வந்து விடும். எளிதில் ஓட்டங்கள் குவிக்கலாம். எனவே சாஹல், குல்தீப் யாதவின் பந்து வீச்சை எப்படி நொறுக்குவது என்பதற்கு வேறு வழிமுறையை கண்டு பிடிக்க வேண்டும் என தென்னாபிரிக்க வீரர் டுமினி தெரிவித்துள்ளார். (க)

# சதம் அடிப்பதுதான் அவரின் வேலை புகழ்ந்து தள்ளிய சச்சின் டெண்டுல்கர்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் போட்டியில் சதம் அடித்த இந்திய தலைவர் விராட் ஹோலிக்கு இந்நாள், முன்னாள் வீரர்கள் 'டுவிட்டர்' மூலம் புகழாரம் சூட்டியுள்ளனர்.



சச்சின் டெண்டுல்கர்: மைதானத்தில் இறங்கி, சதம் அடிப்பது ஹோலிக்கு இப்போது வாடிக்கையாக போய் விட்டது. ஒரு நாள் கிரிக்கெட்டில் 34ஆவது சதம் அடித்ததற்கு வாழ்த்துகள். தொடர்ந்து இதே போன்று சதங்களைக் குவியுங்கள்.

வி.வி.எஸ். லட்சுமண்: அணி நெருக்கடிக்குள்ளான நிலையில், மிக பக்குவமாகவும், பொறுப்புணர்வுடனும் விளையாடினார். நான் பார்த்த சிறந்த ஒரு நாள் போட்டி சதங்களில் இதுவும் ஒன்று.

ஜாவித் மியாண்டட் (பாகிஸ்தான்): எதிரணி பந்து வீச்சாளர்களின் பலம் மற்றும் பலவீனத்தை மிக விரைவாகவே புரிந்துகொண்டு செயற்படுகிறார் ஹோலி. உலகின் சிறந்த துடுப்பாட்டக்காரனான விராட் ஹோலி கிரிக்கெட்டில் ஒரு மேதை.

மைக்கேல் வாகன் (இங்கிலாந்து): ஹோலி, தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருவது வியப்புக்குரியது. ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் அவரை மிகச்சிறந்த வீரராக கருதலாமா?

ஒரு நாள் போட்டியில் அதிக சதங்கள் அடித்தவர்களின் பட்டியலில் சச்சின் டெண்டுல்கருக்கு (49 சதம்) அடுத்த இடத்தில் விராட் ஹோலி (34 சதம்) உள்ளார். (க)

## தேர்தலுக்கு தேவை...

எம்.எம்.முஹமட் தெரிவித்தார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எம்.எம்.முஹமட் மட்டக்களப்பில் வைத்து தேர்தல் நடவடிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாடு எங்கிலுமுள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களுக்கும், பொலிஸ் பாதுகாப்புக்கள் வழங்கப்படுகின்றன. தேவையான இடங்களில் மாத்திரம் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பும் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகளும் காணப்படுகின்றன. இதுவ்ரை தேர்தல் பணிகளுக்கு ஈடுபடுவதற்கான நியமனக்கடிதங்கள் கிடைக்கப்பெற்று தேர்தல் கடமைகளுக்குச் செல்லாத அரசாங்க உத்தியோகத்தர்களும், பாடசாலைகளின அதிபர்கள், ஆசிரியர்களும் கட்டாயம் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய இடத்திற்கு உரிய நேரத்துக்கு கடமைக்காக அறிக்கையிட வேண்டும்.

தவறுகின்ற உத்தியோகத்தர்களுக்கெதிராக தேர்தல் ஆணைக்குழு ஒழுக்காற்று சட்ட நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு தயாராகி வருகின்றது. அதே நேரம் அரசாங்க வாகனங்களை அனுப்பி வைக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்தோ, தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்தோ அறிவுறுத்தல் கிடைத்திருப்பின் அவற்றை அனுப்பி வைக்கத் தவறுகின்றவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வாக்களிப்புகள் நிறைவடைந்ததும், அந்தந்த வட்டாரங்களிலேயே பிரதான வாக்கெண்ணும் நிலையங்களில் இடம்பெறும். வட்டாரத்தின் முடிவுகள் அங்கு அறிவிக்கப்படுவதுடன், தெரிவத்தாட்சி அலுவலரால் மாவட்ட மத்திய நிலையங்களில் உள்ளூர் அதிகார சபைகளின் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எம்.எம்.முஹமட் தெரிவித்தார். (ம)

## பொலிஸாரின் கடும்...

களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு நிறைவடையவுள்ளது. வாக்கு எண்ணும் பணிகள் அந்த அந்த வட்டாரத்திலேயே மாலை 5 மண்க்கு ஆரம்பமாகவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான 148 வாக்களிப்பு நிலையங்களுக்குரிய வாக்கு பெட்டிகள் மாவட்ட செயலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை ஆகிய 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 103 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 1,043 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

114,599 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் அவர்கள் வாக்களிப்பதற்குரிய 148 நிலையங்களுக்கும் மாவட்ட செயலகத்தில் இருந்து நேற்று காலை 8 மணி முதல் வாக்கு பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன. (ம-4)

## வாக்குச்சாவடிக்கு...

க்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ள வாக்களிப்பின் போது கண்காணிப்பு குழு சார்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்ட கண்காணிப்பு அமைப்புக்கள் மாத்திரம் தமது பிரதிநிதிகளை கண்காணிப்பில் ஈடுபடுத்தமுடியும்.

அனுமதிக்கப்பட்ட அமைப்புக்களின் சார்பில் தலா ஒரு கண்காணிப்பாளருக்கு மட்டுமே இந்த அனுமதி உண்டு. இவர்கள் வாக்கெடுப்பு நிலைய பணிகளில் தலையிடுவதற்கோ வாக்காளர்களுடன் உரையாடவோ, நடமாடவோ, சைகை காட்டவோ முடியாது. இதேபோன்று வாக்குநிலையத்திலிருந்து வெளியே செல்லமுடியாது.

இதேவேளை நடமாடும் பணியில் ஈடுபடும் கண்காணிப்பாளர்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

இதற்கமைவாக எழுத்துமூலம் அனுமதிக்கப்பட்டவர்கள் மாத்திரமே வாக்களிப்பு நிலையங்களுக்குள் செல்லமுடியும். இவர்கள் வாக்களிப்பு பணிகளில் இடையூறு ஏற்படாதவகையில் செயற்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## உள்ளூராட்சி மன்ற...

இத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் இத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இன்று மாலை நான்கு மணியுடன் வாக்களிப்பு முடிவடைந்த பின்னர், உடனடியாக வாக்கெண்ணும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். அதனை தொடர்ந்து இன்று நள்ளிரவுக்கு முன்னர் தேர்தல் முடிவுகள் அனைத்தும் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடுமுழுவதிலும் உள்ள 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் 8 ஆயிரத்து 293 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக சுமார் ஒரு கோடியே 58 லட்சம் வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் முதன்முறையாக இத் தேர்தல் ஒரே நேரத்தில் நடைபெறுகிறது. நல்லாட்சி அரசின் அரசியல் நகர்வுகளை தீர்மானிக்கும் தேர்தலாக இத் தேர்தல் எதிர்பார்க்கப்படுவதால், பொதுமக்கள் பாரிய எதிர்பார்ப்புடன் இத்தேர்தலை எதிர்கொண்டுள்ளதுடன் அரசியல் கட்சிகள் அனைத்தும் இத் தேர்தலில் அதிகூடிய அக்கறை செலுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் 8 லட்சத்து 28 ஆயிரத்து 864 பேர் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளதுடன் 997 வாக்கெடுப்பு நிலையங்களில் இன்று வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 521 வாக்களிப்பு நிலையங்களில் 4 லட்சதது 68 ஆயிரத்து 476 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர், கிளிநொச்சி மாவட்டத்தில் 100 வாக்களிப்பு நிலையங்களில் 86 ஆயிரத்து 734 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் 94 வாக்களிப்பு நிலையங்களில் 86 ஆயிரத்து 94 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 134 வாக்களிப்பு நிலையங்களில் 72 ஆயிரத்து 961 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 148 வாக்களிப்பு நிலையங்களில் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 599 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

தேர்தல் கடமைகளில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான அரச அலுவலர்கள் கடமையாற்றுவதுடன் அதிகளவான பொலிஸாரும் பாதுகாப்பு கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். (ம-9)

## பெண் வேட்பாளரை...

அவரது கணவர் வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பெண் 38 வயதான இரண்டு பிள்ளைகளின் தாய் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் வென்னப்புவ பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேலதிக பட்டியலில் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

இவர் சுகவீனம் காரணமாக கடந்த ஜனவரி 5ஆம் திகதி மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், குறித்த பெண் ஜனவரி 8ஆம் திகதி மதியம் முதல் காணாமல் போயுள்ளதாக கணவன் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு செய்துள்ள பெண்ணின் கணவன், வென்னப்புவ பிரதேச சபைக்கு சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். (ம)

## தேர்தல்கள் ஆணை...

ரத்து செய்ய நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அனைத்து மக்களும் வாக்களிக்க செல்ல வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிறைவடைந்ததில் இருந்து இதுவரையான காலப்பகுதியினில், அதிக அளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதனை அவதானிக்க கூடியதாக உள்ளதாக பப்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெற்றியாராட்சி இதனை தெரிவித்துள்ளார். (ம)

## நல்லாட்சி அரசுக்கு...

ளுக்கான தமது ஆதரவை ஐக்கிய நாடுகள் சபை நீடித்துள்ளது என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா பிரதிப் பொதுச் செயலாளர் நாயகம் அமீனா மொஹமட் இதனைத் தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

ஜெனிவாவில் உள்ள இலங்கையின் நிரந்தர வதிவிட பணியகத்தில் இலங்கையின் 70ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் இடம்பெற்றுள்ளது.

ஐ.நா அதிகாரிகள் உட்பட 200 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளனர்.

ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டிடரஸ்ஸை பிரதிநிதித்துவப்படுத்தி, ஐ.நா பிரதிப் பொதுச் செயலாளர் நாயகம் அமீனா மொஹமட் இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார்.

இலங்கையின் கூட்டு அரசாங்கத்தின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்கான ஐ.நாவின் ஆதரவை நீட்டிப்பதாக பிரதி பொதுச் செயலாளர் இதன்போது கூறியுள்ளார். (ம)

# கேப்பாபுலவு மக்களுக்கு எதிராக முள்ளியவளை பொலிஸார் வழக்கு தாக்கல்

(பனிக்கன்குளம்)

கேப்பாப்புலவு மக்கள் சமாதானத்திற்கு இடையூறு விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் முள்ளியவளை பொலிஸாரால் மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் எதிர்த்தரப்பு வாதிகளான கேப்பாப்புலவு மக்கள் ஐந்து பேரின் பெயர் அடங்கிய கடிதம்ஒன்று நீதிமன்றினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளதாகவும் இதற்கு வருகைதருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கேப்பாப்புலவு பூர்விக கிராமத்தை மீட்பதற்காக கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்பு போராட்டம் நேற்று 345 ஆவது நாளாகவும் தொடர்கிறது

கேப்பாப்புலவு மக்களுக்கு சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் கடந்த வருடம் மார்கழி 28ஆம் திகதி மக்கள் முன்னிலையில் படைத்தரப்பில் இருந்து மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கேப்பாப்புலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியாமோட்டை பகுதியில் 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் கையளிக்கப்பட்டது.

குறித்த காணிகளுக்குள் கடந்த 1 ஆம் திகதி மக்கள் சென்றனர்

இந்நிலையில் இன்னும் தமது காணிகளில் விடுவிக்க வேண்டியுள்ள 104 குடும்பங்களுக்கு சொந்தமான 181 ஏக்கர் காணிகளை வடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்து நேற்று 345 ஆவது நாளாகவும் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இவர்கள் கடந்த 4ஆம் திகதி இலங்கையின் 70 ஆவது சுதந்திரதினத்தை புறக்கணித்து போராட்டம் நடத்தியதோடு குழப்பநிலைகளும் ஏற்பட்டிருந்தது இதன் பின்னணியில் கேப்பாப்புலவு மக்கள் சமாதானத்திற்கு இடையூறு விளைவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் முள்ளியவளை பொலிஸாரால் மாவட்ட நீதிமன்றில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கேப்பாப்புலவில் போராட்டம் நடத்திவரும் மக்கள் நேற்று மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர். இதன்போது கருத்து தெரிவித்த செல்வி சி.அரியகலா தெரிவிக்கையில், எமது சொந்த வாழ்விடம் கோரி 345ஆவது நாளாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம். இந்தவேளையில் முல்லைத்தீவு நீதிமன்றில் இருந்து மனுதாக்கல் கடிதம் ஒன்று கிடைத்துள்ளது. அதில் எனது பெயரும் எழுதப்பட்டுள்ளது.

கடந்த நான்காம் திகதி இலங்கை சுதந்திர தினத்தன்று சமாதானத்திற்கு பங்கம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டில் நான் கவனயீர்ப்பு போராட்டத்தில் இணைந்துகொள்ளவில்லை கொட்டகையில் இருந்து சமைத்துக்கொண்டிருந்தேன். என்னையும் இந்த குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கியுள்ள விடயம் உண்மைக்குப்புறம்பான சம்பவம். இது எங்கள் போராட்டத்தை முடக்கும் வகையில் அமைந்துள்ளது.

கேப்பாப்புலவு மக்களின் போராட்டத்தை திட்டமிட்டு மழுங்கடிப்பதற்கு இராணுவத்துடன் இணைந்து பொலிஸாரும் செயற்படும் ஒரு செயலாக இதனை பார்க்கின்றோம். கடந்த பத்து ஆண்டுகளாக எமது பூர்வீக வாழ்விடம் கிடைக்கவேண்டி போராடி வருகின்றோம். நலன்புரி நிலையத்தில் இருந்து எதுவித வாழ்வாதாரமும் அற்ற நிலையில் மீள் குடியேற்றப்பட்டோம்.

தேர்தல் காலத்தில் ஊர்வலம் நடத்தக்கூடாது என்று அரசிற்கு தெரிந்திருந்தால் 345 நாளாக வீதிஓரத்தில் இருக்கின்ற இந்த நாட்டு மக்களை ஏன் ஏதோ ஒரு வகையில் கால அவகாசம் கொடுத்து மக்களை போராட்டத்தில் இருந்து விலக செய்யவேண்டிய அரசு ஆனால் நாங்கள் தேர்தல் காலத்தில் எங்களுக்கு ஒரு நல்லமுடிவு கிடைக்கும் என்று இருந்தோம். அதுவும் கிடைக்கவில்லை இந்நிலையில் எங்களுக்கு ஆண்டவன்தான் பதில் சொல்ல வேண்டும் என்று கோரி விடுபட்ட பிரதேசத்தில் உள்ள ஆலயத்தில் வழிபாடு மேற்கொள்ளத்தான் மக்கள் அங்கு சென்றிருந்தார்கள்.

இது இந்த போராட்டத்தில் முன்னிப்பவர்களை மழுக்கடித்தால் போராட்டத்தை பின்னடைய செய்யலாம் என்று நினைத்துதான் பொலிஸார் இதனை மேற்கொண்டுள்ளார்கள்.

பொலிஸார் நல்ல மனப்பான்மை கொண்டவர்களாக இருந்தால் எங்கள் போராட்டத்திற்காக ஒரு தீர்வினை பெற்று தந்திருக்கலாம். மக்கள் பாதுகாப்புக்கு என்ற பொலிஸார் மக்களுக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருப்பது என்பது உண்மையில் நியாயமான செயலா என பார்க்கவேண்டும். நாங்கள் பேரணியாக சென்றபோது எவருக்கும் பங்கம் விளைவிக்கவில்லை. படையினருக்கோ அல்லது வீதியால் சென்றவர்களுக்கோ பங்கம் விளைவிக்கவில்லை. சுதந்திர நாளில் நாங்கள் சுதந்திரம் இல்லாமல் வீதியில் நிற்க வைத்துள்ளது இந்த அரசு. இதனை ஆண்டவனிடம்தான் முறையிட்டுள்ளோம்.

இந்நிலையில் எங்கள் மக்களின் வாழ்விடத்தை விட்டால்தான் எங்கள் போராட்டம் முடிவு பெறும் எங்களை நீதிமன்றம் கொண்டு சென்றுள்ளதை நீதிமன்றம் எங்களின் நியாயமான கோரிக்கையினை நிறைவேற்றி தரவேண்டும் என்று ஊடகம் ஊடாக தெரிவிக்கின்றோம் என்றார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஆறுமுகம் வேலாயுதபிள்ளை,

இன்று (நேற்று) 345 ஆவது நாளாக இதில் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம் எங்கள் மூதாதையர் ஆண்டபூமியினை கோரியே தர்மத்தை நாடி நேர்மையான வழியில் இந்த போராட்டத்தை மேற்கொள்கின்றோம். படையினரிடம் பொலிஸாரிடம் நாங்கள் இதுவரைக்கும் முரண்படவில்லை. பொலிஸார் எங்களுடன்தான் முரண்பட்டுள்ளார்கள். ஆலய வழிபாட்டிற்கு சென்ற எங்களை தடுத்தவர்கள் பொலிஸார். நாங்கள் நியாய்மான முறையில் எடுத்துரைத்தோம் முன்னோர் ஆண்டபூமியினையும் சிறுவர்கள் படித்த பள்ளிக்கூடத்தையும் அந்த இடத்தில் அவர்களுக்கு காட்டுவதற்குத்தான் சென்றோம். ஆனால் பொலிஸ் அதிகாரி என்னை தவறான வார்த்தைகளால் பேசியுள்ளார்.

இந்நிலையில் நீதிமன்றில் பொலிஸார் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். எல்லாரையும் குடியேற்றியமாதிரி எங்களையும் எங்கள் காணியில் குடியேற்றுங்கள் என்றுதான் போராடினோம். நேர்மையான அரசு எங்களை இவ்வளவு காலம் இழுத்தடிக்காமல் குடியேற்றி இருக்கவேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக எங்கள் நிலங்களில் உள்ள வருமானங்களை படையினர் எடுத்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

இதனை தெரிவிக்கவே இலங்கையின் சுதந்திரதினத்தன்று கறுப்புகொடி ஏந்தி உலகத்தில் உள்ளதமிழ்மக்களுக்கு தெரியப்படுத்தும் முகமாகத்தான் அந்த இடத்திற்கு சென்றோம். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொலிஸார் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். இதே பொலிஸார் படையினருக்கு சார்பாக இருந்து இந்த வழக்கினை தொடர்கின்றார்கள்.

எவருடனும் நாங்கள் கோபதாபம் கொள்ளவில்லை. எங்களை நியாயமான முறையில் மீள்குடியேற்றம் செய்யவேண்டும் மீள்குடியேற்றம் செய்த அன்றுதான் நாங்கள் எங்கள் போராட்டத்தை நிறுத்தி எங்கள் இடங்களில் குடியேறுவோம் அதனைவிடுத்து எனது உயிரை தியாகம் செய்யச்சொன்னாலும் நான் செய்ய தயாராக இருக்கின்றேன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-281)

## புதுக்குடியிருப்பு...

வாகும் உறுப்பினர்களில் ஐந்து பெண்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கு 231 வேட்பாளர்கள் போட்டியிடுவ்துடன், 5 பெண்கள் அடங்கலாக 21 உறுப்பினர்கள் தெரிவாகவுள்ளனர்.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் 2015 பெப்ரவரி 28 ஆம் திகதி நடத்தப்படவிருந்தது.

எனினும், அந்தத் தேர்தலை தடை செய்யும் வகையில் உயர் நீதிமன்றம் 2015 பெப்ரவரி 27ஆம் திகதி இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இரண்டு பிரதேச சபைகளையும் சேர்ந்த வாக்காளர்கள் சிலர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை பரிசீலனை செய்த தன் பின்னர், பிரியசாத் டெப், சரத் அப்ரூ மற்றும் அனில் குணரத்ன ஆகிய நீதியரசர்கள் குழாமினால் தேர்தலை ஒத்திவைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

2011 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பெயர் பட்டியலுக்கு அமைய தேர்தல் இடம்பெற்றால், வாக்களிப்பதற்கு புதிதாக தகுதி பெறும் வாக்காளர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் இல்லாமற்போவதாக வாக்காளர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எச்.ஹிஸ்புல்லா நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய 2011 ஆம் ஆண்டிலும் ஒத்திவைக்கப்பட்டது.

கண்ணிவெடி அகற்றல், மீள்குடியேற்றம் செய்யப்படாமை உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து இந்த இரண்டு பிரதேச சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்குமாறு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.(ம)

## முறைப்பாடுக...

காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க முறைப்பாடுகள், அவதானம் செலுத்தப்பட வேண்டிய தகவல்கள் என்பன காணப்படின் தேசிய முறைப்பாடுகள் விசாரணை மத்திய நிலையத்துக்கு அறியத்தருமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேர்தல்கள் செயலகத்தில் இயங்கும் இந்த மத்திய நிலையம் இன்று காலை 6 மணி தொடக்கம் இயங்கவுள்ளது. அந்த வகையில் அந்தந்த மாகாணங்களுக்கு என வழங்கப்பட்டுள்ள தொலைபேசி மற்றும் தொலை நகல் இலக்கம் ஊடாக முறைப்பாடுகளை பதிவு செய்யமுடியும்.

வடக்கு மாகாண மக்கள் 011 286 6492 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவும் 011 286 6408 என்ற தொலை நகல் இலக்கத்தினூடக மேற்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (ம)

Techno World
(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)
A/L தொழில்நுட்ப பிரிவு
A/L 2020 - திங்கள் - வெள்ளி 8.00 - 12.00
A/L Day Class - திங்கள் - வெள்ளி 8.00 - 1.00
வார நாட்களில் பகலில் நடைபெறும் ஒரேஒரு தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
0770175346
(C-1546)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1527)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
கனடா-1050*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## பதவி வெற்றிடங்கள்

D8 உருத்திரபுரம், கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ள கிளிநொச்சி சிறுவர் இல்லத்தில் (காந்தி நிலையம்) கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- சிறுவர்களைப் பராமரிப்பதற்கான ஆண், பெண் பராமரிப்பாளர்கள் (WARDEN)
- காவலாளிகள் (WATCHERS)

தகைமைகள்

01. க.பொ.த சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை.
02. வயதெல்லை 35-55
03. விடுதியில் தங்கியிருப்பது அவசியம்.
04. உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
05. விண்ணப்பதாரர் தேக ஆரோக்கியமுடையவர்களாகவும் இல்லச்சிறார்களை அன்போடும், பாசத்தோடும் அரவணைத்து சைவநெறி ஒழுக்கத்திற்கும், காந்தியக்கொள்கைகளுக்கு அமைவாகவும் வழிப்படுத்தும் ஆற்றல் தியாக சிந்தனை அர்ப்பணிப்பு மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
06. இப்பதவிகளிற்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் க.பொ.த. உயர் தர சித்தி, கணினி அறிவு மற்றும் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் என்பன மேலதிக தகைமையாக கருதப்படும்.
07. சம்பளம் நேரில் கலந்துரையாடி தீர்மானிக்கப்படும்

விண்ணப்ப முடிவுத் திகதி: 25.02.2018

தொடர்புகளுக்கு: கி.விக்னராஜா
தலைவர்,
கிளிநொச்சி சிறுவர் இல்லம் (காந்தி நிலையம்),
D8, உருத்திரபுரம், கிளிநொச்சி. 077 720 1461
(2713)

## முதலாவது பெறு...

பல வாக்களிப்பு நிலையங்கள் இருக்குமாயின் கணிசமாக வாக்குகள் உள்ள நிலையங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டு ஒரே இடத்தில்வைத்து எண்ணப்படும். இருப்பினும் வாக்குகள் வெவ்வேறாகவே எண்ணப்படும்.

இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தலின் போது மாவட்டங்களில் அளிக்கப்பட்ட வாக்குகளின் பெட்டிகள் ஒரு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு கதவுகள் மூடப்பட்ட அறைக்குள் எண்ணப்படும்.மறுநாள் காலையில் முடிவுகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இம்முறை அவ்வாறான நடைமுறை இடம்பெறமாட்டாது.

இன்று நடைபெறும் தேர்தலில் வரலாற்றில் முதன்முறையாக அளிக்கப்பட்ட வாக்குகள் குறிப்பிட்ட உள்ளுராட்சி மன்றத்தில் வட்டார வாக்களிப்பு நிலையங்களிலேயே எண்ணப்படவுள்ளது. வாக்குகள் எண்ணும் பணி 3 கட்டங்களாக இடம்பெறும்.

முதலாவது கட்டத்தில் ஒவ்வொரு வாக்குப் பெட்டிகளிலுமுள்ள வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். இரண்டாம் கட்டத்தின் கீழ் அந்த வட்டாரத்திற்கு உட்பட்ட தபால் மூல வாக்குகள் எண்ணப்படும்.

இந்த தபால்மூல வாக்குகளின் எண்ணிக்கை 50இற்கு அதிகமாக இருந்தால் தனியாகவும் 50க்கு குறைவாக இருப்பின் அவற்றை ஏனைய வாக்குகளுடன் கலந்து எண்ணப்படும்.

மூன்றாம் கட்டத்தின் கீழ் ஒவ்வொரு கட்சி அல்லது சுயேட்சை குழுக்களினால் பெற்ற வாக்குகள் வெவ்வேறாக எண்ணப்படும்.

வாக்குகள் எண்ணப்படும்போது சந்தேகம் தொடர்பாக ஏதேனும் கட்சி அல்லது சுயேட்சைக்குழுக்களின் முகவரினால் முன்வைக்கப்படும் கோரிக்கைக்கு அமைவாக வாக்குகள் எண்ணும் முகவரினால் வாக்குகள் மீள எண்ணப்படும். இந்த கோரிக்கைகளுக்கு அமைவாக வாக்குகள் இரண்டு தடவை மாத்திரமே எண்ணப்படும். (ம)

ஒடியல் கூழ்
சைவம், அசைவம்
பைறட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chickan - Rice & Bites
யாழ் பாடியில்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

TECHNO WORLD
A/L தொழில்நுட்பப் பிரிவு
A/L 2018
இல் செயல்முறைப் பரீட்சைக்கு (Practical Exam) தோற்றும் தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான விசேட தொடர்ச்சியான செயலமர்வு.
பொறியியல் தொழில்நுட்பம் (E-TEC)
ஆரம்பம் 11,13/02/2018 காலை 9.00 மணி
(வெலிங்டன் சந்தி, புதிய லிங்கம் கூல்பார் அருகாமை)
பிரபல ஆசிரியர் ஜெகநாதன் - இயந்திரவியல் (Auto mobile)
சேரலாதன் (தொழில்நுட்ப பீடம்) - உற்பத்தி தொழில்நுட்பம்
அருண்குமார் (J/MHC) - நில அளவை
சிவயன் (தொழில்நுட்ப பீடம்) - குடிசார் தொழில்நுட்பம்
நிறோஜன் (பொறியியல் பீடம்) - நில அளவை
நிருபன் (தொழில்நுட்ப பீடம்) - நில அளவை
பிரசாந்தன் (தொழில்நுட்ப பீடம்) - Electrical & Electronics
ஹஜிதரன் (யாழ். பல்கலைக்கழக கல்லூரி) - Electrical & Electronics
உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் (BIO-TEC)
திருக்குமரன் (J/NCC)
கலைதீபன் (J/NCC)
சாரங்கன் (K/KCC)
விஷ்ணு (யா/ சிதம்பராக் கல்லூரி)
பொன் சிவகுமார்
குறிப்பு
- யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் விசேட கருத்தரங்கு இடம்பெறும்.
- அகில இலங்கை ரீதியாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முதலிடம் பெற்ற மாணவர்களின் கருத்தரங்கு இடம்பெறும்.
- 2018 பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் (விடைகளுடன்)
- கடந்த 2015, 2016, 2017 செயல்முறை வினாக்கள் விடைகளுடன் தரப்படும்
அனுமதிகள் இலவசம்
077 017 5346
(C-1546)

## சுவிட்சர்லாந்தில்...

சுவிட்சர்லாந்தில் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் மன்னார் நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட நறுவிலிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த றெபின்சன் றொட்ரிகோ துஸான் றொன் சின்ரன் (வயது-20) என தெரிய வருகின்றது.

குறித்த இளைஞன் சுவிட்சர்லாந்தின் (எக்பிளின்ஸ் வீதி) பகுதியில் கடந்த 3 வருடங்களாக வாழ்ந்து வரும் நிலையில் கடந்த புதன்கிழமை மாலை இனம் தெரியாத நபர்களினால் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்போது குறித்த கொலையுடன் தொடர்புபட்ட இலங்கையைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த கொலை தொடர்பில் மேலதிக விசாரணைகளை சுவிட்சர்லாந்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-281)

## முல்லைத்தீவில்...

ள்ளார். இச்சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

மகிந்த அணியில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் தனது கடையில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாக்கு அட்டைகளை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் வெலிஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் வெலிஓயா பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள்.(ம-281)

## எல்...

காரணமாக மேல் நீதிமன்றம் விதித்துள்ள இடைக்கால உத்தரவின் அடிப்படையில் எல்பிட்டிய பிரதேசசபைக்கான வாக்களிப்பு மட்டும் இன்று இடம் பெறாது.

தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட பின்னர் முதலாவது வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தீவு...

இன்று நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை அனுப்பி வைக்கும் பணிகள் நடைபெற்று முடிந்துள்ளன. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.